
விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 16 வியாழக்கிழமை (02.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 288

## சுன்னாகம் மின் நிலையத்தை ஜனாதிபதி திறந்து வைப்பார்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டுக்கு 24 மணிநேர மின் சாரத்தை வழங்குவதற்கென சுன்னாகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மின்நிலையத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்மாதம் திறந்து வைப்பார் என ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித் தார்.

யாழ். குடாநாட்டிற்கு தொடர்ச்சியான முறையில் மின்சாரத்தை வழங்குவதற்காக புதிய மின்சாரப் பிறப்பாக்கிகளின் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், 36 மெஹாவோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய மின் உற்பத்தி நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் மின் சக்தி, எரிசக்தி (10ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலுள்ள கிழக்கு மக்களை 5ஆம் திகதி பதிய நடவடிக்கை


(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலிருந்து பல்வேறு காரணங்களுக்காக மேல் மாகாணத்திலுள்ள பொலிஸ் பிரிவுகளில் தற்காலிகமாக தங்கியி ருப்பவர்கள் தங்களை உறுதிப்படுத்திக் கொள் ளும் ஆவணங்களுடன் மேல் மாகாணத்தி லுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு எதிர்வரும் 5ஆம் திகதி சென்று பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்று பொலிஸ் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

மேல்மாகாணத்திலுள்ள கிழக்கு மக்களின் நன்மைகள் கருதியே இந்நடவடிக்கை மேற் கொண்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த மாதம் 21ஆம் திகதி மேல்மாகாணத் (10ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத் தமிழருக்கு ஆதரவான கட்சி தி.மு.க.மாத்திரமே



## தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு அன்று முதல் இன்றுவரை ஆதரவான கட்சி தி.மு.க.மாத் திரமேயாகும். இலங்கைத் தமிழர்களுக்காக ஒரே நாளில் அறிக்கை விடுத்து அடுத்த நாளில் 7 இலட்சம் மக்களைத் திரட்டி தமிழ கத்தில் பேரணி நடத்திக்காட்டிய கட்சி தி.மு.கதான்.

சட்டப்பேரவையில் உறுப்பினர் பதவிக ளையே ராஜினாமாச் செய்த கட்சி தி.மு.கவே. இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகவே 1991 இல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. இவ் வாறு தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணா நிதி தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரநேரு எம்.பியின் வீட்டின் மீது கிரனைட் வீச்சு

(மட்டக்களப்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் சந்திரநேருவின் வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு இனந் தெரியாத நபர்கள் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தியுள் ளனர்.

திருக்கோயில் பிரதேசத்தில் அமைந் துள்ள சந்திரநேருவின் வீட்டின் மீது இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் காரண மாக வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளதா கவும் சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற் படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ச-5)

## முல்லைத்தீவிலும் கிளிநொச்சியிலும் நான்கு தடவைகள் விமானத் தாக்குதல்

### இருவர் பலி; 13 பேர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் உள்ள கனகாம்பி கைக்குளம் வீதி ஏ-9 சாலை அருகில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று புதன் கிழமை முற்பகல் 10.20 மணிக்கு வான் படையின் இரண்டு கிபீர் விமானங்கள் 3 தடவைகள் மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

இக்குண்டுகள் வீழ்ந்து வெடித்ததில் 4 வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. 16 வீடுகள் சேதமாகியுள்ளன. இதில் இருவர் உடல் சிதறி உயிரிழந்தனர். கொல்லப்பட்டவர்கள் வீதியால் சென்று கொண்டிருந்தவர்கள் என வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இவர்களின் உடல்கள் சிதைந்துள்ள தால் அவை உடனடியாக அடையாளம் காணப்படவில்லை எனவும், இத்தாக்குத லில் 13 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரி வித்துள்ளன. (10ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா அரச அதிபராக திருமதி சாள்ஸ் நியமனம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக திருமதி பி.எம்.சாள்ஸ் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

மூன்று வருடங்களுக்கு மேலாக வவுனி யா மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிப ராக பணியாற்றி வந்த இவர் வவுனியா தலை மையக உதவி அரசாங்க அதிபராகவும் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த எஸ்.சண்முகம் திடீர் இடமாற்றம் செய்யப்பட்ட (10ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அமைப்பின் லொறியிலிருந்து வெடி பொருட்கள் மீட்கப்படவில்லை

### கோர்டன் வைஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னிக்கு நிவாரணப் பொருட்களை அனுப்பி வைப்பதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட உணவு லொறியில் வெடிபொருட்கள் காணப்பட்டதா கக் கூறப்படும் தகவல் உண்மைக்குப் புறம் பானது என்று அந்த அமைப்பின் பேச்சாளர் கோர்டன் வைஸ் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு படையினரால் கைப்பற்றப் பட்ட சி-4 வெடிபொருட்கள் மாவட்ட செய லகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உணவு லொறிகளிலேயே கண்டு பிடிக்கப்பட்டதாக வும் சில ஊடகங்களில் குறித்த தகவல் திரிபு படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் மக்க ளுக்குத் தேவையான அத்தியாவசியப் பொ ருட்களை அனுப்பி வைப்பதற்காக அரசாங் கத்துடன் இணைந்து ஐக்கியநாடுகள் அமைப்பு நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

வன்னிக்குப் பொருட்களை ஏற்றிச் செல் லும் லொறிகளை (10ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தற்கொலைத் தாக்குதலை நடத்தியவர் க.பொ.த.உயர்தர மாணவன்

### பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியாவில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தியவர் தனியார் கல்வி நிறு வன க.பொ.த உயர்தர மாணவன் என அடை யாள அட்டையொன்றின் மூலம் கண்டு பிடித் துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரப் பகுதியில் கடந்த ஞாயிற் றுக்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண் டுத் தாக்குதலை க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வி கற்ற இளைஞன் ஒருவரே நடத்தியி ருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா தனியார் பஸ் நிலையச் சந்தி யில் பொலிஸார் ஏறியிருந்த முச்சக்கர வண்டி மீது, சைக்கிளில் வந்த இளைஞன் ஒருவர் மோதி தற்கொலைக் குண்டை வெடிக்கச் செய்துள்ளதாக இந்தச் சம்பவம் பற்றி தக வல் வெளியிட்டிருந்த பாதுகாப்பு அமைச்ச கம் தெரிவித்திருந்தது.

சம்பவ இடத்தில் சிதைந்த நிலையில் எடுக் கப்பட்ட தற் (10ஆம் பக்கம் பார்க்க)

# மக்களைக் காக்கும் பொறுப்பிலிருந்து இலங்கை அரசாங்கம் நழுவி விட முடியாது!

## மனித உரிமைகள் தொடர்பான நிபுணர்கள் ஒன்றியத்தின் செயலாளர்

(கொழும்பு)

எமது நாட்டில் மனித உரிமை மீறல் விடயங்களில் ஈடுபடுபவர்களையும் அதற்கு உடந்தையாக இருப்பவர்களையும் கண்டுபிடித்து உரிய தண்டனையை அரசு வழங்க தயங்கக் கூடாது.

தனது சொந்த மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு. அந்தக் கடமைப்பாட்டிலிருந்து அரசாங்கம் ஒருபோதும் நழுவிச் செல்ல முடியாது. மக்களுக்கான ஜனநாயக உரிமைகளை வழங்கும் பாரிய கடப்பாடும் அரசாங்கத்துக்கு உண்டு என்று மனித உரிமைகள் தொடர்பான நிபுணர்கள் ஒன்றியத்தின் சிவில் மற்றும் அரசியல் செயலாளரும் களனிப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி அநுர கருணாதிலக தெரிவித்தார்.

உலக சமாதான பேரவையின் இலங்கைக் கிளையான சமாதானத்திற்கும் ஒத்துழைப்புக்குமான அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மனித உரிமைகள் தம்பட்டம் அடித்தலும் யதார்த்தமும் எனும் கருப் பொருளில் இடம்பெற்ற கருத்தரங்கு நேற்று முன்தினம் மாலை கொழும்பு மகாவலி கேந்திர நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில், யுத்தம் இன்று எவ்வாறு வியாபாரமாகிப் போயுள்ளதோ அதேபோன்று சமாதானமும் எம்மவர்களால் மட்டுமன்றி உலகளவில் வியாபாரமாகிப் போயுள்ளது.

இத்தகையவர்களை மக்கள் நன்கு அறிவார்கள். சமூகங்கள் முன்னேற வேண்டுமானால் அவற்றுக்கு உரிமை தேவை. மனிதன் பிறந்ததிலிருந்து மரணிக்கும் வரை ஆத்மார்த்தமாக வாழ அவனுக்கு மனித உரிமை அவசியமாகும்.

அந்த உரிமையை எவருமோ அல்லது எந்த அமைப்புமோ தர முடியாது. அது அவனது ஜீவாதார உரிமையும் கூட. எதிர்க் கட்சிகளும் அரசுக்கு எதிராக மனித உரிமை விடயத்தைக் கிளப்புகின்றன.

அரச சார்பற்ற அமைப்புகளும் மனித உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வது குறித்து ஆராய்கின்றன. சில அமைப்புகள் தமது சுய இலாபம் கருதி மனித உரிமை குறித்துப் பெரிதாகத் தம்பட்டம் அடிக்கின்றன.

அரசுகளைக் கவிழ்ப்பதற்காகவும் இவ்விடயத்தைப் பெரிதுபடுத்தப்படுகின்றது. மொத்தத்தில் மனித உரிமை என்ற நாமம் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் அரசியல் மட்டத்தில் உச்சரிக்கப்பட்டு வருகின்றது.

எமது நாட்டில் அரச சார்பற்ற அமைப்புக்கள் உள் விவகாரங்களில் தலையிடுகின்றன. இலங்கை நிலைவரம் குறித்து எம்மவர்களை விட சர்வதேச நாடுகளே கூடுதலாக அலட்டிக் கொள்கின்றன.

2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி லூயிஸ் ஆர்பர் அம்மையார் இலங்கை மனித உரிமை மீறல் மலிந்த நாடாக உள்ளதாகக் கூறினார். இலங்கையின் யதார்த்த நிலையினைப் பார்க்கும் போது யுத்தம் அதிகரித்தல், பொருளாதாரப் பிரச்சினை, அந்நிய நாடுகளின் தலையீடு, விலைவாசி அதிகரித்தல், கடத்தல், கொலை, ஜனநாயக உரிமை மீறல், துஷ்பிரயோகங்கள் ஆகியன ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் இடம்பெற்று வருகின்றன.

இவை நிகழ்வதால் அந்நிய நாடுகளின் தலையீடுகள் இங்கு அதிகரித்துள்ளன. அரசு இங்கு இடம்பெறும் அநியாயங்களுக்கு பதில் கூறியாக வேண்டும்.

எமது நாட்டில் மனித உரிமை மீறல் விடயங்களில் ஈடுபடுபவர்களையும் அதற்கு உடந்தையாக இருப்பவர்களையும் கண்டுபிடித்து உரிய தண்டனை யை அரசு வழங்கத் தயங்கக் கூடாது.

தனது சொந்த மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்குண்டு. அந்தக் கடமைப்பாட்டிலிருந்து அரசாங்கம் ஒருபோதும் நழுவிச் செல்ல முடியாது. மக்களுக்கான ஜனநாயக உரிமைகளை வழங்கும் பாரிய கடப்பாடு அரசாங்கத்துக்கு உண்டு என்றார். (ச-5)



வன்னி நிலப்பரப்பில் ஐக்கிய நாடுகள் சபை உட்பட்ட அனைத்து உதவி நிறுவனங்களும் வெளியேற்றப்பட்டமையைக் கண்டித்து இணைத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், யப்பான் ஆகிய நாடுகளின் தூதரகங்களுக்கும் நோர்வேயிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கும் தமிழ் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய மனு நேரில் சென்று கையளிக்கப்பட்டது. தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மனுவைக் கையளிப்பதையும் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான உண்ணாநிலை கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

## யப்பானில் புகலிடம் கோரும் இலங்கையரின் தொகை அதிகரிப்பு

இலங்கை உட்பட பல நாடுகளிலிருந்து யப்பானில் அகதிகளாக புகலிடம்கோரி விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக அகதிகளுக்கு உதவி வரும் தன்னார்வ நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 15ஐ அடைந்திருப்பதாக அந்த அமைப்பு கூறுகின்றது. மியன்மார் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளிலிருந்தே கூடுதலானவர்கள் விண்ணப்பிக்கின்றனர்.

இதனைவிட இலங்கை, நேபாளம் மற்றும் எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் காணப்படும் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை காரணமாக அந்த நாடுகளிலிருந்து புகலிடம் கோருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என ரோக்கியோவைத் தளமாகக் கொண்டியங்கும் அகதிகளுக்கான யப்பான் நிலையம் தெரிவித்துள்ளது.

யப்பானில் அகதிகளுக்குப் புகலிடம் வழங்கும் திட்டம் 1982ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டதுடன், கூடுதலானவர்கள் புகலிடம் கோரி விண்ணப்பித்த ஆண்டாக 2008 ஆம் ஆண்டு கருதப்படுவதாக அந்த அமைப்பு கூறுகிறது.

புகலிடம் கோருபவர்களின் எண்ணிக்கை இந்த வருடமே முதன்முறையாக ஆயிரத்தை தாண்டியிருப்பதாக தெரிவிக்கும் அந்த நிலையம், இதற்கு அடுத்த கூடுதல் எண்ணிக்கையாக 2006 ஆம் ஆண்டு 954 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறுகிறது.

ஆசியப் பிராந்திய நாடுகளில் நிலவி வரும் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை இந்த அதிகரிப்புக்கு காரணமாக இருக்கலாமெனவும், இந்த விடயம் தொடர்பாக மத்திய அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்திருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம், ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ள யப்பான் முயற்சிப்பதும், பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக அமெரிக்கா தனது குடிவரவுச் சட்டத்தில் கடும்போக்கினைக் கடைப்பிடிப்பதும் யப்பானில் அகதிகளாகப் புகலிடம் கோருவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு மற்றுமொரு காரணமாக அமைந்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (ச-5)

## கொள்ளையுடன் தொடர்புடைய மூவர் கைதாகி விளக்கமறியலில்

(பருத்தித்துறை)

நெல்லியடி மற்றும் வதிரிப் பகுதிகளில் முகமூடி அணிந்து கொள்ளைச் சம்பவங்களுடன் ஈடுபட்டு வந்த மூவர் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுப் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவ் வழக்கை விசாரணை செய்த பருத்தித்துறை நீதிவான் கே.அரியநாயகம், மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இக் கொள்ளையர்களுடன் தொடர்புடைய மேலும் சிலரை நெல்லியடிப் பொலிஸார் தேடி வருகின்றனர். பொதுமக்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். விளக்கமறியலில் உள்ள மூவரும் இன்று அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (ச-52)

# வட. மாகாண சபைத் தேர்தலுக்குப் பின் ஐந்து மாகாண சபைகளுக்குத் தேர்தல்!

## விரைவில் நடத்த அரசு முஸ்தீபு

ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் தேர்தல்களை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் துரிதப்படுத்துமாறு தேர்தல்கள் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேல், வடமேல், தெற்கு, மத்திய, ஊவா மற்றும் வடக்கு மாகாணங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆறு மாகாண சபைத்தேர்தலையும் ஒரே நேரத்தில் நடத்துவதா? அல்லது தனித்தனியாக நடத்துவதா? என்பது தொடர்பில் இது வரையிலும் தீர்க்கமான முடிபொன்று எட்டப்படவில்லை என்றும் தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

எவ்வாறாயினும் வடமாகாணத்தில் தேர்தல் நடைபெறாமல் இருக்கின்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்தி முடித்ததன் பின்னரே ஏனைய மாகாண சபைகளுக்குமான தேர்தல் நடத்தப்படும் என்றும் மேல், மத்திய, தென் மாகாண சபைகளுக்கான தேர்தல் ஒரே நாளிலும் வட மேல், சப்ரகமுவ மாகாணங்களுக்கான தேர்தல் பிறிதொரு நாளிலும் இவ் விரண்டு தேர்தல்களும் முடிபடைந்ததன் பின்னரே வடமாகாணத்திற்கான தேர்தலை நடத்தவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் 2009 ஆம் ஆண்டில் தேர்தல்களை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் துரிதப்படுத்துமாறு மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு தேர்தல்கள் திணைக்கள ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அண்மையில் ஆலோசனை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## சிறுகதைப் போட்டியில் யாழ்.மாணவி முதலிடம்

(கொழும்பு)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஹற்றன் நஷனல் வங்கியும் கல்வி அமைச்சும் இணைந்து அகில இலங்கை ரீதியில் நடத்திய 'உலகை வெற்றி கொள்ளும் சிறுவர்கள்' போட்டியின் சிறுகதைப் போட்டியில் தமிழ் மொழி மூலம் பங்கு பற்றியோரில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி ஜே.உஷானி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற கட்டுரை, சிறுகதை, பாடல், நாடகம், பேச்சு, சித்திரம் ஆகிய போட்டிகளில் 9 ஆயிரத்து 800 பாடசாலைகளைச் சேர்ந்த ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நேற்று கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் நடைபெற்றது. (ச)

## துடுப்பாட்டப் போட்டி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் அணிக்கும், மாணவ முதல்வர் அணிக்கும் இடையான துடுப்பாட்டப் போட்டி இன்று பிற்பகல் 12.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (அ)

## மகாத்மா காந்தியின் ஜெயந்தி தினம்

மகாத்மா காந்தியின் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு இன்று காலை பருத்தித்துறை பஸ் நிலையத்திலுள்ள காந்தி சிலைக்கு மலர் மாலை அணிவிக்கும் நிகழ்வு இடம்பெற்று அதன் பின்னர் விசேட கூட்டம் நடைபெறும் என அமைப்பாளர் ஆ.வடிவேலு தெரிவித்தார். (ச-52)

# இன்று ஒரு தகவல்

## மனிதனும் பூமியும்

கிராமத்து ஆள் ஒருவர் வந்தார். "ஐயா!இன்று ஒரு தகவலில் சொல்வது நல்லவிஷயமாகத் தான் இருக்கிறது! இருந்தாலும் அதைக் கேட்டு யாரும் தங்கள் பழக்க வழக்கத்தை மாற்றிக்கொண்டது மாதிரித் தெரியவில்லையே!" என்றார்.

"அப்படியாசொல்றீங்க?" என்றேன்.

"ஆமாம் ...இப்பொழுது எங்கள் கிராமத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். நாங்களெல்லாம்கேட்கத்தான் செய்கிறோம். இருந்தாலும் எனக்கு ஒரு பிரச்சினை அது இன்னமும் தீர்ந்த பாடில்லை" என்றார்.

"உங்கள் பிரச்சினை தான் என்ன?" என்று கேட்டேன்.

"ஐயா... நான் ஒரு சாதாரண விவசாயி. எனக்கு கிராமத்தில் மூன்று ஏக்கர் நிலம் இருக்கிறது. என் நிலத்தை அடுத்து ஒரு பெரிய மனுஷனுக்கு சொந்தமான முப்பது ஏக்கர் நிலம் இருக்கிறது.

அந்தஆள், வரப்பை கொஞ்சம் கொஞ்சமாக தள்ளிக் கொண்டே வருகிறார்.

30 ஏக்கர் வைத்திருக்கிறவர் மூன்று ஏக்கர் நிலத்தை சேர்த்துக் கொண்டு வருவது நியாயம் தானா? நீங்களே சொல்லுங்கள்.

இத்தனைக்கும் அவர் தினமும் 'தகவல்' கேட்கிறார். நீதிக்கதைகளெல்லாம் படிக்கிறார் இருந்தாலும் என்ன பிரயோசனம்?என்று அலுத்துக் கொண்டார் அந்த விவசாயி.

சரி...கவலைப்படாதீங்க... நானே உங்கள் கிராமத்துக்கு வந்து அந்த ஆளைப்பாக்கிறேன் என்றேன். அவரும் நம்பிக் கையுடன் திரும்பிப் போய் விட்டார்.

சொன்னபடியே ஒரு தடவை அந்த கிராமத்துக்குப் போய் அந்த மனிதரைப் பார்த்தேன் வரவேற்பு – உபசாரம் – பேச்சு –பழக்கவழக்கம் எல்லாம் நன்றாகத்தான் இருந்தது.

இருந்தாலும் சொத்து – சுகம் சேர்க்க வேண்டும் என்ற ஆசை மட்டும் அவருக்கு அதிகமாக இருந்தது. அதற்காக நியாயம் தவறிக் கூட நடப்பதற்கு அவர் தயாராக இருந்தார்.

அவரிடம்ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தேன் நான் கேள்விப்பட்ட கதைகளையெல்லாம் சொன்னேன்.

ஒருவன் அப்படித்தான் தனக்கு நிறைய நிலம் வேண்டுமென்று ஆசைப்பட்டானாம்.

அதற்காக கடவுளிடம் வேண்டிக் கொண்டானாம். கடவுளும் ஒரு நாள் திடீரென அவன் முன் வந்து நின்றார்.

"எனக்கு இந்தப் பூமியில் நிறைய இடம் சொந்தமாக இருக்கவேண்டும் நிலம் மட்டும்நிறைய இருந்தால்மற்ற சுகமெல்லாம் நானாக தேடிக் கொள்வேன். அதனால் இதற்கு மட்டும் ஏற்பாடு பண்ணுங்கள்" என்றான்.

சரி என்றுசொல்லி அவனைஒரு வெட்டவெளிக்கு அழைத்துப் போனார் கடவுள்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே திடல் தான். கடவுள் அவனைப் பார்த்து "இப்பொழுது நீ இங்கிருந்து நேராக ஓட வேண்டும். உன்னால் எவ்வளவு தூரம் ஓடமுடியுமோ ஓடி அங்கேஒரு குச்சியை நட்டு விட்டு... சூரியன் மறைவதற்குள் இந்த இடத்துக்கு வந்து விட வேண்டும்அப்படி வந்து விட்டால் நீ எதுவரை ஓடினாயோஅதுவரைக்கும் உள்ளநிலம் முழுவதும் உனக்கே சொந்தம்" என்றார்.

இவனுக்கு மிக்க சந்தோஷம். பலம்கொண்டவரைக்கும் ஓடினான். உச்சிவேளை வந்ததும் ஒரு இடத்தில் குச்சியை நட்டுவிட்டு திரும்பிவேகமாக ஓடிவந்தான்.

நிலம்வேண்டுமென்ற ஆசையில் அவன் சாப்பாட்டை மறந்தான். தண்ணீரை மறந்தான். ஓடிவந்து புறப்பட்ட இடத்தி லேயேவந்து விழுந்தான் விழுந்தவன் எழுந்திருக்க வேயில்லை. ஆள்காலி! இறந்து போனான்!கடவுள் சொன் னார்.

"இப்பொழுது இந்த மனிதனுக்குத் தேவை இவன் விழுந்து கிடக்கும் இந்த ஆறடிநிலம் தான்!" என்றார்.

இந்தக் கதையைக் கேட்ட அந்தக் கிராமத்துப் பெரிய மனுஷன்...

"மனிதனுக்குத் தேவை எவ்வளவு என்பதை இப்பொழுதுதான் புரிந்து கொண்டேன்." என்றார்.

"அப்படி இருக்கும் போது முப்பது ஏக்கர் வைத்திருக்கும் நீங்கள் மூன்று ஏக்கர் வைத்திருக்கும் அந்த ஆளின் நிலப்பக்கமாக வரப்பைத் தள்ளிக் கொண்டு போகலாமா?" என்றேன்.

"அது தப்புத்தான் சேர்! எடுத்ததை கொடுத்து விடுகிறேன் இருந்தாலும் ஒரு ரகசியம்! இந்த முப்பதுஏக்கரில் பெரும் பகுதி கொஞ்சம் கொஞ்சமாக வரப்பை நகர்த்தி சம்பாதித்தது தான் சேர் !" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உள்ளூராட்சி மன்றச் செயற்பாடுகள்; விழிப்புணர்வுப் பரீட்சை -மானிப்பாய் பிரதேச சபை

மானிப்பாய்,வலிகாமம், தென் மேற்கு பிரதேச சபையினால் அண் மையில் அப் பிரதேச பாடசாலை மாணவர்கள்மத்தியில்நடாத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயற் பாடுகள் தொடர்பான விழிப்புணர்வு பரீட்சையில்பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்அடிப் படையிலான பிரதேச மட்டமாணவர் நிலைப்பட்டியல்வருமாறு

பிரிவு I

வே. நிந்துஜா–பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலை- 1,சு.மேரிடிலஸ்ரினா–இளவாலை கன்னியர் மடம் ம.வி.- 2,தே.சசிரேகா–பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலை -3,வில்லியம் யேசுரட்ணம் –நவாலி ம.வி.–4,சஜந்தினி–சண்டிலிப்பாய் –இந்துக் கல்லூரி –4,ம. நிலானி – இளவா லை கன்னியர்மடம்ம.வி.–5, அ. மெஸ்ரின்நிஷா –ஆனைக்கோட்டை றோ.க.வி. – 6, சி. நிஷாந்தினி–மயிலிட்டிறோ.க வித்தி–6, ர.ரவிச்சந்திரிக்கா–மயிலிட்டி றோ.க. வித்தி–6, த.டிலக்ஷினா–மயிலிட்டி றோ. கவித்தி. -6, அ.யேசுகி–நவாலி ம.வி–6,சி.சுஞ்சிகா–ஆனைக் கோட்டை றோ.க. வித்தி.–7,கோ. அபிஷாலினி–இளவாலை கன்னியர் மடம்ம.வி.–7,பா.மதுரசி–இளவாலை கன்னியர் மடம் ம.வி.– 7,செ. நிரோஜினி –நவாலி ம.வி.– 7, சி.காயத்திரி– சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி – 7

கலாஜினி –பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலை –8,றோமன் ஜெனாலட்– மயிலிட்டி றோ.க.வித்தி. –9, வி.சர் மினி–சண்டிலிப்பாய் இந்துக்கல் லூரி– 9,பிருந்தா –சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி –9, கவிப்பிரியன்– மானிப்பாய் இந்துக்கல்லூரி –10,

ப.சுகன்யா–ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி– 11,விமோசனன்–ஆனைக் கோட்டை பால சுப்பிர மணியம் வித்தி.–12, நிலக் சன்– மானிப்பாய் இந்துக் கல் லூரி – 13,நிரூபன் மாதகல் சென் யோசப் வித்தி.– 13, லோ. ஆனந்தராஜ் மயிலிட்டி றோ.க.வித்தி–13, ச.கலித் சுதுமலை சின்மயபாரதி வித்தி.– 13,தேவராஜன் மானிப்பாய் இந்துக் கல்லூரி–14, தினேஷ் மானிப்பாய் இந்துக் கல்லூரி –14, பூ.பானு கசர்மா மானிப்பாய் இந்துக்கல் லூரி – 14,பீ.கமல்ராஜ்மாதகல் சென் ஜோசப் வித்தி.– 14,அன்ரன் தர்சன் மாதகல் சென் ஜோசப் வித்தி.–14

மனோகரன் ஜெயந்தன்– நவாலி அட்டகிரி வித்தி.–14,பவித்திரா சௌந் தரராஜன் ஆனைக்கோட்டை பாலசுப் பிரமணியவித்தி. –15, தேவதாஸ் சிந்துஜா பண்டத்தரிப்பு யசிந்தா வித்தி.–15, காசிலிங்க சர்மா ஜெய ரூபினி–பிரான்பற்று கலைமகள் வித்தி.–15,அ.மேரி மெல்சியா–சில் லாலை றோ.க. வித்தி.–15, முத்து லிங்கம் கஜீபனா–ஆனைக்கோட் டை றோ.க.வித்தி – 16, டிலானி இராச துரை–பிரான்பற்று, கலைமகள் வித்தி.–16,ஜோபிபன்ஸ்டன் ஜெயக் குமார்–சில்லாலை றோ.க.வித்தி.–16, துஷ்யந்தன் ஸ்ரீசாஸ்வதனன் – சுதுமலை சின்மய பாரதி வித்தி.–16, தேவராஜ் ஆன்லிமொனிற்றா– மாதகல் சென்ஜோசப் வித்தி.–17, பாலச்சந்திரன்–ராஜினி–பிரான் பற்று கலைமகள் வித்தி–17, டில்லி ராசா டினிஷ்கா–சண்டிலிப்பாய் வடக்கு த.க.பாடசாலை–17, கி.தர்சன்– சில்லாலைறோ. க. வித்தி–17, இ. அனிற்றா–சில்லாலை றோ.க. வித்தி– 17, சயந்தினி அமிரதலிங்கம்–சுது மலை சின்மயபாரதி வித்தி.–17, நீக்கிலஸ்–சுகேனியா–பண்டத்தரிப்பு யசிந்தா வித்தி.–18, தவராசா கயல்யா– சண்டிலிப்பாய் வடக்கு த.க. பாட சாலை–18, குலதெய்வம் சங்கீதா– உயரப்புலம் குணபாலன் வித்தி.–18, மரியதாஸ் தர்சனா–பண்டத் தரிப்பு யசிந்தா வித்தி.–19, விமலச்சந்திரன் பிறின்சிகா –கீரிமலை நகுலேஸ்வரி மகாவித்தி. –20, பிறின்ஸ் பிலிப் டிலக்சனா–நவாலி அட்டகிரி வித்தி. –20, வி. வினுஜா–கீரிமலை நகு லேஸ்வரி ம.வி.–21, தங்கராசா பர்சிகா– சண்டி லிப்பாய் வடக்கு த.க. பாட சாலை–21, விசாகேஸ்வரக் குருக்கள் வெங்கடசர்மா–உயரப்புலம் குணபாலன் வித்தி.–21, வி.தினுசுயா–கீரிமலை நகுலேஸ்வர ம.வி.–22, சிறியபால ரனுஜா–உயரப்புலம் குணபலன் வித்தி. 23

பிரிவு II

அ.ஜோன் ஜிப்பிறிக்கோ–சண்டி லிப்பாய்–1, த.விஷிதா–பண்டத் தரிப்பு மகளிர்பாடசாலை–2, சு.தேவகி– சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி–2, சி.சதீகுமார்–சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி–2,சி.குகனேஸ்வரன்–சண்டி லிப்பாய் இந்துக்கல்லூரி–3, சோ. பிரணவன்– மானிப்பாய் இந்துக் கல்லூரி–4, கு. ஹேமானந்தா– மானிப்பாய் இந்துக் கல் லூரி–5, செ.ஆனலாவண்யா–இள வாலை கன்னியர் மடம் ம.வி.–6, ச.சலூஜா– நவாலி ம.வி.–7, கு.அழகு வதனா– பண்டத்தரிப்பு மகளிர் பாட சாலை– 7, சுமிதா இரத்தினசிங்கம்–ஆனைக் கோட்டைபாலசுப்பிரமணிய வித்தி.–8, சு.பகீரதி –இளவாலை கன்னி யர்மடம் ம.வி.–8, தி.ஜானுஜா– பண்டத்தரிப்பு மகளிர்பாடசாலை–8, வி.கயல்விழி– இளவாலை கன்னியர்மடம் ம.வி.–9, அ.துஷ்யந்தா–இளவாலை கன்னி யர்மடம்ம.வி.–9, உ. டிசானி–ஆனைக் கோட்டை றோ. க.வித்தி. –10, கோ. சபீகரன்–மானிப் பாய் இந்துக்கல் லூரி–11, வே ஸ்ரீதேவி –மாதகல் சென் யோசப் வித்தி.–12, த.மயூரன்– மாதகல் சென்யோசப் வித்தி.–13, கி.குகப்பிரியா–மாதகல் சென் யோசப் வித்தி.–13, யோ.கீர்த்தி ஜா– பிரான்பற்று கலைமகள் வித்தி. –14, வ.லிக்னா–மாதகல் சென்யோசப் வித்தி.–15, ப.ரம்யா–ஆனைக்கோட் டை பாலசுப்பிரம ணிய வித்தியால யம்–16, கோசலா–சில்லாலை றோ.க. வித்தி.–16, த.தம்பிமுத்து–மயிலிட்டி றோ.க.வித்தி.–17, நா.ஜெயந்தினி– பிரான்பற்று கலைகள் வித்தி.–17, ம.அமல்தாஸ்–மயிலிட்டி றோ.க. வித்தி.–18, இ.றேகா–பிரான்பற்று கலை மகள் வித்தி.–19, த.ருஷிந்தா–பிரான் பற்று கலைமகள் வித்தி.–19. (அ)

# வருடாந்த விளையாட்டுவிழா

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் புலோலி வடகிழக்கு மாதர்கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத் தப்பட்டுவரும் அன்பு மலர்கள் முன் பள்ளி வருடாந்த விளையாட்டு விழா 4ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஸ்ரீ ரூபரஜனி தலைமையில் நடை பெற வுள்ள இவ் விளையாட்டு விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.முருகையா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

பருத்தித்துறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.நிர்மலன், பருத்தித்துறை பிரதேசமுன்பள்ளி ஆசிரியர்சங்க ஆலோ சகர் ஏ.என். எஸ்.திருச்செல்வம், பருத்தித்துறை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.பீ.யோகராஜா, பருத்தித் துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.சிவகுமார், பொது முகாமையாளர் பீ.இராசலிங்கம், கல்வி உத்தியோகத்தர் ஜோ.கொண்விக்ரர், புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் கே.நித்தியானந்தன், புலோலிவட கிழக்கு கிராம உத்தியோகத்தர் பீ.குமரேசன், பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி தனலெட் சுமிதேவி இரவீந்திரன், புலோலி வடகிழக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க உபதலைவர் திருமதி கே.லோகேஸ்வரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்வர். (அ–52)

# சிறுவர் தினவிழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும்

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக சர்வதேச சிறுவர் தின விழாவும், சமுர்த்தி சமூகஅபிவிருத்தி மன்றத்தின் பரிசில் வழங்கும் நிகழ்வும் பருத்தித்துறை பர்வத வர்த்தனி கலாமண்டபத்தில் இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சி வடக்குப் பிரதேசசெயலர் ஆர். வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மேலதிக மாவட்டநீதிபதி ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா கலந்துகொள்வார்.

வரவேற்புரையை சமுர்த்தி மகா சங்க முகாமைப் பணிப்பாளர் ஆர். அன்ரனி நிகழ்த்துவார். சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை காணிப்பதிவாளரும் மேலதிக மாவட்டப் பதிவாளருமான திருமதி. சரஸ்வதி தியாகராஜன், வடமராட்சி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தி ஆகியோரும் கௌரவ விருந்தினராக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை நிர் வாக உத்தியோகத்தர் ஆர்.விக் னேஸ்வரமூர்த்தி கலந்து கொள்ளவார். பரிசில் வழங்கலையடுத்து முன்பள்ளி சிறுவர்களினதும், பாடசாலைமாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. பருத்தித்துறை சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவி உத்தியோகத்தர் செல்வி என். யோகேஸ்வரி நன்றியுரை நிகழ்த்துவார். (அ–52)

# இராசி பலன்

02.10.2008
(புரட்டாதி 16, வியாழக்கிழமை)
சுவாதி பிற்பகல் 1.45 மணிவரை
திருதியை பிற்பகல் 4.06 மணிவரை
இராகுகாலம் 1.32–3.02 மணிவரை
சுபநேரம் 7.32–9.02 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | மனோதைரியம், எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, குடும்பசுகம். |
| இடபம் | சத்துருஜெயம், ஆரோக்கியம், தடைப்பட்ட காரியம்கை கூடும், போசன சுகம். |
| மிதுனம் | அஜீரணரோகம், முயற்சிதாமதம், பணக்குறைவு, கௌரவக் குறைவு |
| கடகம் | தன்னம்பிக்கைக் குறைவு, தன விரயம், உறவினர். சந்திப்பு, புதிய விடயம். |
| சிங்கம் | நற்கீர்த்தி, பிரயாண நன்மை, சகோதரர் உதவி, அதிகபிரயாசை |
| கன்னி | செல்வாக்கு குறைவு, வேலைச் சுமை,முயற்சிதாமதம், போசன சுகக்குறைவு |
| துலாம் | வெகுமானம், பெரியோரால் நன்மை, கற்பனைமிகுதி, புதிய முயற்சி. |
| விருச்சிகம் | அமைதிக்குறைவு, காரியதடங்கல், பணவிரயம், பிறருக்கு உதவி செய்தல் |
| தனுசு | தனதானிய சேர்க்கை, சயன சுகம், குடும்பத்தில் மகிழ்ச்சி, முயற்சி கைகூடும். |
| மகரம் | பெரியயோரால் மதிக்கப் படுதல், தூரதேசச்செய்தி, மனமகிழ்ச்சி |
| கும்பம் | சரீரப்பிரயாசை, ஆரோக்கியக் குறைவு, எதிர்பாராத செலவு, கட்டுப்படுதல். |
| மீனம் | முழங்கால்வலி, பகைவரால் தொல்லை, காரியதடங்கல், வாகன பயம். |

வளவன்

## சரஸ்வதி பூசை

யாழ். சமூக அபிவிருத்தி மன்றம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு சரஸ்வதி பூசை கொண்டாடவுள்ளது. இதில் பணியாளர், பணிப்பாளர் கழக அங்கத்தவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். அத்துடன், கழக உறுப்பினர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது. (அ)

## ஸ்ரீஅம்மா பகவான் ஐஸ்வரிய பூசை

ஸ்ரீஅம்மா பகவான் ஐஸ்வரிய பூசையும் சொற்பொழிவும், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் 4 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.

"ஸ்ரீ அம்மா பகவான் அருள் ஆட்சி" என்னும் பொருளில் சைவ சித்தாந்த பண்டிதர் கலாநிதி பிரம்மஸ்ரீ கு.சிவராஜசர்மா உரையாற்றவுள்ளார்.

இதேவேளை, நல்லூர் முருகன் சன சமூக நிலையத்தில் ஸ்ரீ அம்மா பகவான் நவராத்திரி பூசை செவ்வாய்க்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகிறது. (அ)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

இளையதம்பி இந்து வித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 8மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர், திருமதி அ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரமும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் 2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து நடாத்தும் பாராட்டு விழா இன்று பிற்பகல் ஒரு மணியளவில் விழாக் குழுத் தலைவர் க.சிவகுமார் தலைமையில் பாடசாலைக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க. அருள்வேல், உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ. குபேரநாதன், வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். தமிழ்மாறன், வலி. தெற்கு உதவிப் பிரதேச செயலர் அ. சோதிநாதன், யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் வி.கணேசராசா ,வயாவிளான் முன்னாள் அதிபர் சி.நடராசா ஆகியோர் பாராட்டுரை வழங்கி சிறப்பிக்கவுள்ளதாக பாடசாலை அதிபர் எஸ். சிவானந்தராஜா தெரிவித்துள்ளார். (அ)

## கொக்குவில் சுட்டி மலர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் நூலகத்தினரால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு "கொக்குவில் சுட்டி மலர்" என்னும் நூல் வெளியிடப்படவுள்ளது.

இந் நூலுக்கு வேண்டிய ஆக்கங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட சிறுவர்களை கொக்குவில் நூலகர் கேட்டுள்ளார். (அ-36)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட அரியாலை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி (A.R.V) இன்று வியாழக்கிழமை காலை 9மணிமுதல் 12 மணிவரை அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 2மணி முதல் 3.30 மணிவரை றக்கா வீதி சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-6)

## காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சிறுவர், முதியோர் நல்லொழுக்க தினவிழா

(காரைநகர்)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம், கரித்தாஸ்-கியூடெக் நிறுவன அனுசரணையுடன் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் நடாத்தப்படும் சிறுவர் முதியோர் நல்லொழுக்க தினவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவன், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, சிறப்புவிருந்தினர்களாக வடபிரதேச நல்லொழுக்க சம்மேளன தலைவர் க.புஸ்பராசா, கரித்தாஸ்-கியூடெக் நிறுவன இயக்குநர் வணபிதா சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார், யாழ்ற்றன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம், கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலய அதிபர் திருமதி யு.சிறிஸ்கந்தராஜா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் சிறுவர், முதியோர் நல்லொழுக்க தின சிறப்புரையாக யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை பேராசிரியர் கா.குகபாலன் சிறப்புரையாற்றவுள்ளார். அத்துடன் தியாகி அறக்கொடை நிறுவன ஆதரவுடன் முதியோர்களுக்கான உதவித்திட்ட ஆரம்ப நிகழ்வு,கரித்தாஸ்-கியூடெக் நிறுவன ஆதரவில் திறமையான முதன்மை மாணவர்களுக்கான பரிசில் வழங்கல், வட பிரதேச நல்லொழுக்க சம்மேளன ஆதரவில் காரைநகர் பிரதேசத்தில் நல்லொழுக்க மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (அ-246)

## விலங்கு விசர் நோய் தொடர்பான நலத்துறைச் செய்திகள்-நாள் 5

**விலங்கு விசர் நோய்க்கான ஆபத்தும், கடியின் தன்மையும், ஆபத்துக் கூடிய நிலைமைகள்**

- தலை, முகம், கழுத்தில்கடி.
- முதுகு அல்லது மார்பில் கடி.
- உள்ளங்கை, உள்ளங்கால், விரல்களில் கடி.
- பாலுறுப்புக்களில் கடி.
- பல கடிகள்.
- உடலின்எப்பாகத்திலேனும்ஆழமான கடி
- மென்சவ்வுப் பிரதேசத்தில் நக்குதல். (கண், மூக்கு, உதடு)
- காட்டு விலங்குகளின் கடி.
- கடித்த விலங்கை கண்டுபிடிக்க அல்லது அவதானிக்க முடியாத நிலை.
- தொடர்ச்சியாக 3 ஆண்டுகள் தடுப்பு மருந்தால் பாதுகாக்கப்படாத விலங்கினால் கடியுண்டால்.
- கடித்து இரண்டு வாரங்களினுள் மாறுபாடான நடத்தையை விலங்கு காட்டுதல்.
- எந்தத் தூண்டலமின்றி விலங்கு பலரைக் கடித்திருந்தால்.
- கடித்ததைத் தொடர்ந்து 14 நாட்களினுள் விலங்கு இறந்திருந்தால் அல்லது சுகவீனமுற்றிருந்தால்.

**ஆபத்துக் குறைவான நிலைமைகள்**

- ஆரோக்கியமான வளர்ப்பு விலங்கு (தடுப்பு மருந்து ஏற்றப்படாவிடினும் அவதானிக்கக் கூடிய விலங்கு)
- தூண்டலினால் ஏற்பட்ட கடி.
- அறிந்த குணங்குறிகளற்ற விலங்கு.
- கடிக்கும் வேளையில் சுகவீனமுற்றிருந்தாலும் ஒழுங்காக 3 வருடங்கள் தடுப்பு மருந்தேற்றப்பட்ட விலங்கு. (அ)



நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் பரிசில் நாள் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம், சிறப்பு விருந்தினரான யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம், யாழ்.மாவட்ட சி.க.கூ.சமாசத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் ந.சிவகுமாரன், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் செ.பத்மநாதன் ஆகியோர் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவதைப் படங்களில் காணலாம்.

## அனலைதீவு அரசம்புலத்தில் — நவராத்திரி பெருவிழா —

அனலைதீவு அரசம்புலம் எழுவடி வயல் எழுமங்கை நாச்சிமார் என விளங்கும் அருள் மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோயில் நவராத்திரி பெருவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6மணிக்கு ஆலய மண்டபத்தில் அறங் காவலர் சபைத் தலைவர் ச. சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி G.பவானி கலந்து சிறப்பிப்பார்கள்.

நிகழ்வில் ஆசியுரையினை பிரம்மஸ்ரீ போ.வெங்கடேஸ்வரசர்மாவும், வரவேற்புரையினை ச.சிவராசாவும், சிறப்புரைகளை அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய அதிபர் வீ. ஓங்காரலிங்கமும், அனலைதீவு தெற்கு அ.த.க. பாடசாலை அதிபர் செல்வி ச. விக்னேஸ்வரியும், அனலைதீவு வடலூர் அ.த.க. பாடசாலை அதிபர் திருமதி கௌரி கேதீஸ்வரநாதனும், கிராம அலுவலர் வ. வடிவழகையனும் வழங்குவார்கள்.

"வல்லமை தாராயோ பராசக்தி" எனும் தலைப்பில் நவராத்திரி சிறப்பு பேருரையினை மதுகவி காரை எம்.பி. அருளானந் தன் நிகழ்த்துவார். இதனைத் தொடர்ந்து சங்கீத பூசணம் எஸ். குமாரசாமி ஈழத்து தலை சிறந்த அணி செய் கலைஞர்களும் பங்குகொள்ளும் தெய்வீக இசையரங்க நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. (அ)

## கசிப்பு விற்பனை செய்த பெண்ணுக்கு ரூபா 75 ஆயிரம் அபராதம்

(பருத்தித்துறை)

கசிப்பு விற்பனையிலீடுபட்டுள்ள துன்னாலையைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் ரூபா 75ஆயிரம் அபராதம் விதித்ததுடன், ஒருஇலட்சம் ரூபா நன்னடத்தைப் பிணையில் செல்ல உத்தரவிட்டது. அபராதத்தைச் செலுத்தத் தவறினால் 8 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.


பருத்தித்துறை மதுவரிப் பரிசோதகர்களால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி கே. அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட அப் பெண் தன் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை ஒப்புக்கொண்டார். இப் பெண் சட்ட விரோத கசிப்பு விற்பனை செய்த குற்றத்திற்காக முன்னரும் நீதிமன்றத்தின் தண்டனையைப் பெற்றவர் என்பதும் மன்றின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. (அ-52)

## யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடாத்தப்படும், யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா. 4 ஆம் திகதி சனிக்கிழமையும்5 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணிமுதல் யாழ்.மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் யாழ். மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமிதலைமையில்நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஷ், கௌரவ விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை, சிறப்பு விருந்தினர்களாக யாழ். இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் தி. சிவதட்சணாமூர்த்தி, யாழ். கல்வி வலய விளையாட்டு உதவிப் பணிப்பாளர் கே.குமாரசாமி, யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ். பத்மநாதன், இளைப்பாறிய உதவி விளையாட்டுப் பணிப்பாளர் கே.டபிள்யூ விமலராஜன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)




## தொல்புரம் மேற்கு கிராம அபிவிருத்தி

"கலந்துகொள்ளல் அபிவிருத்திக்கான வெற்றி" கிராமிய தலைமைக் குழுக் கூட்டம் தொல்புரம் மேற்கு (J/169) கிராம உத்தியோகத்தர் எஸ்.கே.சிவலிங்கம் தலைமையில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்றது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தில் 9பேர் கொண்ட தலைமைக்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதில் சமுர்த்தி உத்தியோகத்தர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர், அரச வெளிக்கள உத்தியோகத்தர் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

இக் கூட்டத்திலும் 29 ஆம் திகதி நடைபெற்ற குழுக் கூட்டத்தில் பின்வரும் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அது தொடர்பாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தொல்புரம் பாணாவெட்டி அரசினர் மத்திய மருந்தக வைத்தியசாலை பல வருடங்களாக விஸ்தரிக்கப்படாமல் இருந்து வருவதால் அதனை விஸ்தரித்து பிரசவ விடுதியும், அம்புலன்ஸ் வண்டியொன்றும் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

மழைகாலத்துக்கு முன் தொல்புரம் மேற்கு கிராம எல்லைக்குட்பட்ட வீதிகள், தெருக்களில் காணப்படும் கழிவுப்பொருட்கள், தகரங்கள், பீங்கான் போன்ற பொருட்களை அகற்றி துப்புரவு செய்தல்.

இச் செயற்பாடுகளை பிரிவிலுள்ள சன சமூக நிலையங்களின் அனுசரணையுடன் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் நடாத்துவதெனவும், சங்கானைப் பிரதேச சபையினரின் ஒத்துழைப்புடன் வாகனம் மூலம் வெளியகற்றுவது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ-6)

# நோத்முதல் கோபல்லவா வரை 115



## பொறுப்பில்லாத சட்டசபை

கொறியா அவர்கள் சிலாப மகாசபைத் தலைவர் என்ற ரீதியில் சட்டசபையில் உத்தியோக அங்கத்தவரின் தனியாட்சியை நீக்கிவிட்டுப் பிரதிநிதித்துவ ஆட்சியை அமைத்தல் வேண்டும் என்று 1909 ஆம் ஆண்டில் கிளர்ச்சி செய்தார். பின்னர் வெறுங் காணிக் கட்டளைச் சட்டம் வந்த போது அதனைப் பல காரணங்கள் காட்டி எதிர்த்தார். இலங்கைச் சட்டசபைக்கு அக் கட்டளைச் சட்டத்தைப் பிறப்பிப்பதற்கு ஆளெல்லையோ,ஆளதிகாரமோ இல்லை என்று வாதாடினார். அது சம்பந்தமான ஒரு வழக்கின் மேன்முறையீட்டில் உயர் நீதியரசர் வுட்றென்ரம் கொறியாவுக்கு 5000 ரூபா குற்றம் விதித்தார். அத்தண்டனை 1915 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது விதிக்கப்பட்டதாயினும் அத் தொகையை யூசுப் என்ற முஸ்லிம் ஒருவர் கொடுத்துதவினார்.அதனால் கொறியா அவர்களின் தேசியப் பணியை எல்லோரும் வியந்தனர் எனத் தெரிகிறது.

அருணாசலம் அவர்கள் தலைமையில் நடந்த சீர்திருத்த இயக்கத்திலும், தேசிய மகா சபையிலும் கொறியா அவர்கள் காரிய நிர்வாக சபையில் ஓரங்கத்தவராய் அமர்ந்து உதவி செய்தமையோடு அவர் இங்கிலாந்துக்கும் சென்று திருத்தங்கோரிய குழுவில் ஒருவராயிருந்தார். சேர் யேம்ஸ் பீரிஸ் அவர்கள் ஆள்பதி மனிங் அமைத்த சட்ட சபைத் திருத்தத்தைப் பரீட்சார்த்தமாக ஏற்றுக்கொண்ட போது கொறியா அவர்கள் அதனைத் தீவிரமாக எதிர்த்தார்கள். அதன் பயனாய் 1921 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சட்ட சபைத் தேர்வில் வடமேல் மாகாணத் தொகுதியில் கொறியா அவர்கள் போட்டியின்றித் தெரியப் பெற்றார்.

### மீள் பார்வை

கொறியா அவர்கள் தலைசிறந்த தேசியவாதி. முன்னர் தேசிய மகாசபையை விட்டு விலகிய தமிழரை ஒன்று சேர்ப்பதற்கு கொறியா அவர்கள் வெகுவாக முயற்சி செய்தார்கள். அவர் 1924 ஆம் ஆண்டில் தேசிய மகாசபையின் தலைவராயிருந்த போது தமிழரோடு செய்துகொண்ட நல்லுறவின் பயனாகவே கொழும்புத் தமிழ்த் தொகுதி தமிழருக்கு வழங்கப்பட்டது என்றும் கூறுவர். அத்தோடு அவர் பூரண சுதந்திரம் கோரி நின்றார் என்றும் டொனமூர்த் திருத்தத்தை வெறுத்து அதனை ஒன்றியொதுக்கல் செய்தார் என்றுங் கூறுவர்.

நாட்டுப் பற்றுள்ள கொறியா அவர்கள் 'மகாத்மாகாந்தியடிகளைப் பின்பற்றித் தாமே தமது ஆடைகளை வீட்டில் நெசவு செய்து அணிந்தார். தேசிய மனப்பான்மையோடு யாழ்ப்பாணத்தில் நிலவிய வாலிப மகாநாட்டினரோடு நெருங்கிய தொடர்புகொண்டு அவர்களைத் தேசியப் பணியில் ஊக்குவித்தார். முதலாவது அர்சாங்க சபைத் தேர்வை வாலிப மகாநாட்டினர் வன்மையாக வெறுத்து ஒன்றியொதுக்கல் செய்தமையைப் பின்பற்றியே வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்கள் அதில் அளப்பரிய சேவை செய்தார். இராமநாதன் அவர்களுக்குப் பின் துரைசுவாமி அவர்களே முதுபெருந் தமிழ்த் தலைவர் என்பர். துரைசுவாமி அவர்கள் இல்லத்தில் கூடிய சிங்களத் தலைவர்கள் "மகேந்திரா" ஒப்பந்தம் என ஓர் உடன் படிக்கையும் எழுதினார்கள் என்பர்.

ஆள்பதி மனிங் அவர்கள் செய்த திருத்தத்தைத் தமிழர் விரும்பாமைக்குக் காரணம் சிங்களவராலேயே கற்பிக்கப்பட்டன. தமிழர் சிங்களப் பிரதிநிதிகள் தொகையில் 2/3 தொகை கேட்ட விடத்தில் 1/2 பங்கிலும் குறையப் பெற்றதை அவர்கள் விரும்பவில்லை என்றும்,பொறுப்பாட்சி கிடைக்கப் போகும் தருணத்தில் தமக்குப் பிரதிநிதித்துவம் குறைந்தால் பகிரங்க சேவையிலும் தங்கள் பங்கு குறைந்து விடலாம் என அஞ்சினர் என்றும் சிங்களவரே கூறினர். இன்னும் ஒரு காரணம் அவர்கள் கூறியமை அருணாசலம் அவர்கள் தேசிய மகா சபையை விலகிப் போனமையோடு சம்பந்தப்பட்டதாகும். தமக்குக் கொழும்புத் தொகுதியில் ஒரு தமிழாசனங் கிடைக்கப் பெறாதமையால் அவர் பிரிந்து போனார் என்றார்கள். மேல் மாகாணத்தில் மூன்று ஆசனங்கள் இருந்தமையால் அதில் ஒன்றைத் தமிழருக்குக் கொடுப்பதில் ஒரு குறையும் இல்லையே.

அதிகம் பெற்ற சிங்களச் சகோதரர் தாமும் திருப்திப்பட்டார்களோ என்றால் இல்லை. அவர்கள் ஆள்புலவாரியான பிரதிநிதித்துவத்தை விரும்பினார். ஆனால் இலங்கையில் வகுப்புவாதப் பிரதிநித்துவம் நிலவியதை அவர்கள் விரும்பவில்லை. அதனை அவர்கள் வெறுத்தனர். வகுப்புவாதப் பிரதிநிதித்துவத்தைப் பிரித்தாளும் தந்திரோபாயமாக

**க.சி.குலரத்தினம்**

ஆங்கிலேயர் கைக்கொண்டனர் எனச் சிங்களவர் கருதினர். மனிங் திருத்தத்தைப் பறங்கியரும் ஐரோப்பியரும் விரும்பவில்லை. அதற்குக்காரணம் தமக்கு அளிக்கப்பட்ட வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் போதாது என்றமை. ஆள்புலவாரியாகப் பிரதிநிதித்துவ முறை இருந்தமையால் தாங்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிய இயலாது எனக் கருதினர். (தொடரும்)




யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் 17 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் மாவட்டத் தலைவர் மா.நாகலிங்கம் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும்,கௌரவ விருந்தினரான வர்த்தக வங்கியின் ஆஸ்பத்திரி வீதி கிளை முகாமையாளர் எஸ்.ரவீந்திரர் உரையாற்றுவதையும், மேடையில் மங்கள் வங்கியின் பிரதான வீதி கிளை முகாமையாளர் வி.எஸ்.முதலி, மாவட்டத் தலைவர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், பிரதம விருந்தினரான யாழ்.செயலகத் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபனுக்கு மாவட்டத் தலைவர் நினைவுப் பரிசில் வழங்குவதையும், வெற்றிபெற்ற சிறுவனுக்கு பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# எமது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள்

# சமூக ஒற்றுமையை உருவாக்க உதவவேண்டும் 4



இவற்றின் வெளிப்பாடாகவே எமது மதம், மொழி, இலக்கியம், இசை, நடனம், நாடகம், கூத்து என்பன வளர்ந்தன. அவற்றை எமது மூதாதையர் படைத்த கலைப் பொருட்களிலும், பாவனைப் பொருட்களிலும் காணலாம். இன்று நாம் வழிபாட்டில் இருந்து நீக்கிய சிற்பங்களும், சிலைகளும்,முன்னர் பயன்படுத்திய எமது பாவனைப் பொருட்க ளும் இன்று பிறநாடுகளுக்கு கடத்தப்பட்டு அவை பல இலட்சம் ரூபாவிற்கு வாங்கப்பட்டு அங்குள்ள அருங்காட்சியகங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அப் பொருட்களை எப்படி நாம் எமது பண்பாட்டின் அடையாளமில்லை எனக் கூற முடியும். இன்று பிறநாட்டுப் பொருட்களின் வருகையால் எமது பாரம்பரிய நாளாந்தப் பாவனைப் பொருட்கள் படிப்படியாக மறைந்து போகின்றன. எமது மூதாதையர் பயன்படுத்தி வந்த பல பாவனைப் பொருட்கள் அநாகரிப் பொருட்களாக ஒதுக்கப்படுகின்றன. உதாரணமாக பெட்டி, கடகம், பாய், குல்லம்,சுளகு,திருகணை, உறி, பாக்குவெட்டி, உரல், உலக்கை,அம்மி,குளவி, திருவலை, மத்து, கிடாரம்,செம்பு,மூக்குப்பேணி முதலான பொருட்களைக் குறிப்பிடலாம்.

ஆனால் இவை வெறும் சடப்பொருட்கள் அல்ல. அவற்றில் எமது பாரம்பரிய கலை மரபுண்டு. அழகியல் உண்டு, தொழில்நுட்பம் உண்டு.எல்லாவற்றிற்கு மேலாக எமது சமூக வாழ்வின் பல விழுமியங்கள் அவற்றில் இணைந்து காணப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்துவதால் மட்டும் எம் பண்பாடு பாதுகாக்கப்படும் என நான் வற்புறுத்தவில்லை. ஆனால் அவற்றைப் பாதுகாத்து வைப்பதும் எம்பண்பாட்டைப் பாதுகாக்க உதவும் எனக் கருதுகிறேன். ஆனால் எம் மக்களில் பலர் இன்று இப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதை அநாகரிகமாகக் கருதுகின்றனர்.

இதற்குப் பிரதியீடாகப் பிற இடத்துப் பொருட்களைப் பயன்படுத்துவதை நாகரிகமாகக் கருதுகின்றனர். இந்த நாகரிக மோகத்தால் எமது பண்பாட்டின் அடிப்படை அத்திவாரமே காலப்போக்கில் சிதைந்து போகும் ஆபத்திற்கு உள்ளாகலாம். அவற்றை விரித்துக் கூற இது கருத்தரங்கல்ல. இருப்பினும் இவ்விடத்தில் உதாரணத்திற்காக ஒன்றைக் கூறி அமர விளைகிறேன்.

கவிஞர் நமக்கல் அவர்கள் தமிழர்கள் எத்தனை கூப்பாடு போட்டாலும் அவர்களின் பண்பாட்டு அடையாளமாக மிஞ்சப் போவது கிராமத்து தேவதைகளே எனக் குறிப்பிட்டார். ஆனால் கிராமிய வழிபாட்டை அதிகம் ஆதரிக்காத ஆறுமுகநாவலர் பெருமான் ஆகம மரபில் ஆலயங்கள் அமைக்கப்படுவதை வலியுறுத்தி வந்தார். பிற்காலத்தில் முற்போக்குச் சிந்தனை உடையவர்கள் எமது பண்பாட்டின் தனித்துவம் நாட்டார் வழிபாட்டில் உண்டு எனக் கூறி நாவலரின் கருத்தை விமர்சனம் செய்தனர்.

அது எனக்கும் பொருத்தமாகவே தெரிகிறது. ஆனால் இன்று நிலைமை மாறி விட்டது. வெளிநாடுகளில் இருக்கும் நம் இளைஞர்கள் தமது கிராமத்து ஆலயங்கள் புதுப்பொலிவு பெற விரும்புகின்றனர். இதனால் மரநிழலிலும், ஓலைக்குடிசை யிலும் இருந்த தெய்வங்களுக்கு மிகப் பெரிய கட்டடங்கள் தோன்றுகின்றன. கும்பாபிசேகம் நடைபெறுகிறது. காலம் தப்பாது விழாக்கள் நடைபெறுகின்றன. இவை வரவேற்கத்தக்க விடயம். ஆனால் இதிலுள்ள வேதனைக்குரிய விடயம் என்னவென்றால் எந்த ஆலயத்தை, எந்த தெய்வத்தை எமது பண்பாட்டின் அடையாளமாகப் பார்த்தோமோ அவ்வாலயத்தின் பெயரும், ஆண்டவன் பெயரும் நாகரிகமற்றவை எனக் கூறி அவை புதிய பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

இதனால் முன்னர் காளி,கண்ணகி, வைரவர்,அண்ணமார், நாதம்பிரான் என அழைக்கப்பட்ட ஆலயங்கள் இன்று அம்மன், இராஜேஷ்வரி,சிவன்,ஈஸ்வரன் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இவ்வாறு தெய்வத்தின் பெயர்களை மாற்றுவதை எமது சமூகம் நாகரிக மாற்றமாகப் பார்க்கிறது. எமது பண்பாட்டின் பெரும்பகுதி ஆலயத்திற்குள் இருந்து வெளிக்கிழம்பியவை. அதனால் தான் எமது சமூகத்தினர் தாம் மரநிழலில் வாழ்ந்த காலத்திலும் ஆண்டவனுக்கு முதலில் கட்டடம் அமைத்தனர். ஆனால் நாகரிக மாற்றம் எனக் கருதி ஆண்டவன் பெயரும், ஆலய மரபும் மாறும்போது எப்படி எமது பண்பாட்டுத் தனித்துவத்தைப் பாதுகாப்பது என்பது தெரியவில்லை... இதன் விளைவால் எமது பாரம்பரிய பண்பாட்டு அடையாளங்கள் பல எதிர்காலத்தில் மறைந்துபோக வழியேற்படலாம் என்பது என் எண்ணமாகும்.

இச் சூழ்நிலையில் இன்றைய கலாசார விழாவை ஒரு சில மணிநேரத்திற்கு மன மகிழ்வை அளிக்கும் களியாட்ட விழாவாக ஏற்படுத்தாது எமது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் விழாவாக ஒழுங்குபடுத்தியிருப்பது பெரிதும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இப்பணியை சிறப்பாக செய்திருக்கும் பிரதேச செயலாளரும்,

**பேராசிரியர் க.கந்தசாமி**
பௌதீகவியல் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அவருடன் இணைந்து செயலாற்றிய கலாசார குழுவும், எம் மக்களும் என்றும் நன்றிக்குரியவர்கள். இந்த இடத்தில் எமது பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறை உடையவன் என்ற வகையில் இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மாறிவரும் தகவல் தொழில்நுட்பத்தால் எமது வாழ்வியல் கோலத்தில் பல மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்கவியலாது. இதனால் எமது பூர்வீக பண்பாட்டு விழுமியங்கள் அவற்றால் அள்ளுண்டு போகும் அபாயத்திற்கு உள்ளாகியுள்ளன. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்திற்குள் எமது சமூக வரலாறும், பண்பாட்டு வரலாறும் ஓரளவுக்கு வெளிச்சம் பெற்றமைக்கு அவர்கள் எம்மைப் பற்றி எழுதி வைத்த ஆவணங்களே இன்று உதவியாக உள்ளன. (தொடரும்)

# அனைத்துலக பாராளுமன்றத்தின் கவனத்திற்கு மஹிந்த அரசின் மனித உரிமை மீறல்கள்

## டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டமைப்பு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஜனநாயக விரோத செயற்பாடுகள் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்திருக்கின்றது என்று அக்கட்சியின் கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

மனித உரிமைகளைப்பாதுகாப்பதற்காக தன்னை அர்ப்பணித்து செயற்பட்டு வரும் சிரேஷ்ட சட்டத்தரணி வெலியமுனவின் வீட்டின் மீதான குண்டுத்தாக்குதல் திட்டமிடப்பட்ட சதியாகும். இதனை எமது கட்சி மிக வன்மையாகக்கண்டிக்கின்றது என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஜயலத் மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதனைக் காரணம் காட்டியே பல்வேறு வகைகளில் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன.

அடிப்படை உரிமை மீறல்களும் மனித உரிமைமீறல்களும் மலிந்துவிட்ட நாடாக இலங்கை மாற்றமடைந்திருக்கின்றது. ஊடக சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. இதனால் தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமை மறுக்கப்பட்டு இருக்கின்றது. அச்சுறுத்தல்கள் , படுகொலைகள் மற்றும் கடத்தல்களுக்கும் முகம் கொடுத்துக்கொண்டிருக்கும் நிலையே உருவாக்கப்பட்டிருக்கின்றது.

சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்க அரசாங்கம் இழுத்தடிப்புக்களை மேற்கொண்டு வருகின்றது. சகல தரப்புகளும் 17ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறு கோருகின்ற போதிலும் அரசாங்கம் உதாசீனப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மனித உரிமைகள் தொடர்பில் அஜராகின்ற சிரேஷ்ட சட்டத்தரணி வெலியமுனவை இலக்கு வைத்து குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலின் பின்னணியில ஏதோ ஒரு சதி இருப்பதாகவே தோன்றுகின்றது. இன்றைய கூட்டமைப்பு அரசாங்கம் ஜனநாயகத்திற்கு விரோதமாக செயற்பட்டுவருகின்ற அதேவேளை அப்பட்டமான மனித உரிமை மீறல்களுக்கும் வழி அமைத்துக் கொடுக்கின்றது .இது பாரிய விபரீதங்களை ஏற்படுத்துவதாகவே அமைந்திருக்கின்றது.

இதனை அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார். (அ-6)

## அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாம கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் வடமாகாண கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளதால் சகலஅதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பாடசாலைகளுக்கு நியமிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனக்கடிதங்கள் கிடைக்கப்படாமை தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை 9 மணிக்கு யாழ். பெருமாள் கோவிலடியில் இடம்பெறவுள்ளது. (அ)

# மனித உரிமை மீறல்களை தடுப்பதில் அரச தலைவருக்கு அக்கறை இல்லை

## ஆசிய மனித உரிமைகள் சபை

(கொழும்பு)

இலங்கையில் மோசமடைந்து வரும் மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு அரச தலைவருக்கோ அல்லது அரசுக்கோ அக்கறை இல்லை என ஆசிய மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரச அதிகாரிகளுக்கு எதிரான முறைப்பாடுகளை மேற்கொள்பவர்கள் கொல்லப்படும் போது அரச ஊடகங்கள் அமைதியாக இருக்கின்றன.

அரசாங்கம் ஊடகங்களை தனக்கு சார்பாக கையாள்வதனால் மக்கள் பெரும் பாதிப்படைந்து வருகின்றனர். பொலிஸாருக்கு எதிராக ஊழல் தடுப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாட்டை மேற்கொண்ட சுகத் திசந்த பெர்னாண்டோ செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி கொல்லப்பட்டுள்ளார்.

2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இதே மாதிரியான முறைப்பாட்டை மேற்கொண்ட காரணத்திற்காக ஜெயராஜ் பெரேரா படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

தற்போதைய சம்பவம் தொடர்பாக தனியார் ஊடகங்கள் அதிக தகவல்களை வெளியிட்டிருந்தன.

ஆனால் அரச தலைவரோ பிரதமரோ மனித உரிமை அமைச்சரோ அல்லது அரசைச் சார்ந்த பேச்சாளர்களோ இந்த படுகொலையை கண்டிக்கவில்லை என்பதுடன் அது தொடர்பான விசாரணைகளுக்கும் முன் வரவில்லை.

அரசுக்கு எதிரான இத்தகைய குற்றச்சாட்டுக்களை தவிர்க்க வேண்டும் என்றால் அரசு படுகொலைகள் தொடர்பான விசாரணைகளையாவது மேற்கொள்ள வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# மனித உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுத்த நாடுகளில் இலங்கைக்கு விசேட இடம்

## சமாதான செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நாடுகளின் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்த முக்கியத்துவம் வாய்ந்த நாடாக இந்த முறை இலங்கைக்கு விசேட இடம் ஒன்றை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு வழங்கியிருப்பதாக சமாதான செயலகம் தெரிவிக்கின்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 9ஆவது கூட்டத்தொடர் கடந்த 2 வாரங்களாக சுவிஸ்லாந்தின் ஜெனிவா நகரில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தொடரில் பிரான்ஸ், நெதர்லாந்து உள்ளிட்ட நான்கு நாடுகளால் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் கடுமையாக கேள்வி எழுப்பப்பட்டதாக சமாதான செயலகத்தின் தலைவரான பேராசிரியர் ரஜீவ விஜயசேகர தெரிவித்தார்.

இந்த சகல கேள்விகளுக்கும் சரியான பதில்களை இலங்கை பிரதிநிதிகள் வழங்கியதாக அவர் குறிப்பிட்டார்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் மேற்கொண்டிருந்த உண்மையற்ற பிரசாரங்கள் இம்முறை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் பலனற்றுப்போனதாக சமாதான செயலகத்தின் முக்கியஸ்தர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் அரசாங்கத்தின் ஊடாக வழங்கப்படும் மனிதாபிமான உதவிகள் தொடர்பில் சர்வதேசம் இந்த சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்ததாக சமாதான செயலகத்தின் தலைவர் பேராசிரியர் ரஜீவ விஜயசேகர மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழருக்கு அமெரிக்கா அடைக்கலம்

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இலங்கையருக்கு அமெரிக்கா தஞ்சம் அளித்துள்ளது.

அமெரிக்காவின் சட்டமாஅதிபர் திணைக்களம் குறித்த இலங்கையருக்கு அரசியல் தஞ்சம் வழங்கியுள்ளதாக சிவில் சுதந்திர ஒன்றியத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் குடிவரவு குடியகல்வு நீதவான்கள் குறித்த இலங்கையருக்கு 2 தடவைகள் அரசியல் தஞ்சம் அளித்த போதிலும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயதுடைய அகிலன் நடராஜ் என்பவருக்கே அமெரிக்க சட்டமா அதிபர் திணைக்களம் அரசியல் தஞ்சம் அளித்துள்ளது.

2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நடராஜ் அமெரிக்காவிற்கு வந்த தாகவும் பின்னர் விடுதலைப்புலி களுடன் தொடர்புகளை பேணிய காரணத் திற்காக அவர் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப் பட்டதாக வும் தெரிவிக்கப்படுகிறது. (அ-6)

# ஒசாமா பின்லேடன் பிடிபட்டால் அமெரிக்காவிடம் ஒப்படைப்பேன்

## பாகிஸ்தான் ஜனாதிபதி தெரிவிப்பு

அல்-கொய்தா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் பிடிபட்டால் அவரை அமெரிக்காவிடம் ஒப்படைப்பதாக பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி தெரிவித்துள்ளார். ஒசாமா பாகிஸ்தானில் மறைந்திருப்பதாக கருதப்பட்டு வரும் நிலையில் பாகிஸ்தான் இந்தக் கருத்தினை ஏற்க மறுத்துள்ளது. இந் நிலையில் அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றுக்கு ஆசிப் அலி சர்தாரி வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளார். பாகிஸ்தானில் ஒசாமா பிடிபட்டால் அவரை விசாரணைகளுக்காக அமெரிக்காவிடம் ஒப்படைப்பதாகவும் எனினும் பாகிஸ்தான் இராஜதந்திரிகளின் ஆலோசனையின் பெயரிலேயே இதுகுறித்து முடிவெடுக்கப்படும் எனவும் அவர் இந்த செவ்வியில் தெரிவித்துள்ளார். (அ-6)

# யாழ். கல்வி வலயம் சதுரங்கப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி வலய சதுரங்கப் போட்டிகள் நாளை காலை 8.30 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும். கோட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகள் இப் போட்டிகளில் பங்குபற்றலாம் என உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி தெரிவித்துள்ளார்.

கோட்டங்களுக்கான முடிவுகள் வருமாறு,

**யாழ் கோட்டம் தரம்4 தனியாள் ஆண்**

1ம் இடம் கே. சாருஜன்-புனித பொஸ்கோ வித்தி,2ஆம் இடம் எஸ்.கரணிதரன்-சென் பெனடிற் றோ.க,3ஆம் இடம்எஸ்.யோயல் பிரவீன்-சென்ஜோன்ஸ் கல்லூரி

**தரம் 4தனியாள் பெண்**

1ஆம் இடம் யே.வித்தியா-புனித பொஸ்கோ வித்தி,2ஆம் இடம்பி.கஜலஷ்மி-திருக்குடும்பக் கன்னியர் மடம்ம.வி,3ஆம் இடம் ஆர். கிருகிலா- திருக்குடும்பக் கன்னியர் மடம். ம.வி,

**குழு 13வயது ஆண்**

1ஆம் இடம்-யாழ் மத்திய கல்லூரி, 2ஆம் இடம்- சென்ஜோன்ஸ் கல்லூரி, 3ஆம் இடம் சென் பற்றிக்ஸ் கல்லூரி

**13வயதும் பெண்**

1ஆம் இடம் சுண்டுக்குளி மகளிர்கல்லூரி, 2ஆம் இடம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை 3ஆம் இடம் திருக் குடும்பக் கன்னியர் மடம் ம.வி,

**தரம் 5 ஆண்**

1ஆம் இடம் புனித பொஸ்கோ வித்தி, 2ஆம் இடம் சென்ஜோன்ஸ் கல்லூரி, 3ஆம் இடம் யாழ்மத்திய கல்லூரி

**தரம் 5 பெண்**

1ஆம் இடம் புனித பொஸ்கோ வித்தி, 2ஆம் இடம் திருக்குடும்பக் கன்னியர் மடம் ம.வி, 3ஆம் இடம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

**நல்லூர் கோட்டம் தரம் 4 தனியாள் - ஆண்**

1ஆம் இடம் சு.செந்தூரா யாழ் இந்து ஆரம்ப பாடசாலை, 2ஆம் இடம் நா.அனோயன் யாழ் இந்து ஆரம்பபாடசாலை,

**தரம் 4 தனியாள் பெண்**

1ஆம் இடம் ஆதித்தியா, லாவன்யா, 3ஆம் இடம் செ.பிரசாந்தினி

**குழு 13வயது ஆண்**

1ஆம் இடம் யாழ் இந்துக்கல்லூரி. 2ஆம் இடம் கொக்குவில் இந்துக்கல்லூரி.

**குழு 13வயது பெண்**

1ஆம் இடம் கொக்குவில் இந்துக்கல் லூரி, 2ஆம் இடம் யாழ் இந்துமகளிர் கல்லூரி

**தரம் 5 ஆண்**

1ஆம் இடம் யாழ் இந்து ஆரம்ப பாட சாலை

**தரம் 5 பெண்**

1ஆம் இடம் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, 2ஆம் இடம் யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

**கோப்பாய் கோட்டம்-தரம் 4 தனியார் ஆண்**

1ஆம் இடம் இரட்ணசிங்கம் ஶ்ரீராம் அச்சுவேலி மத்திய கல்லூரி, 2ஆம் இடம் த.பிரசாந் புனித சென்திரேசாள் மகளிர் கல்லூரி, 3 ஆம் இடம் மகேந்திர ராஜா ஜனகன் அச்சுவேலி மத்திய கல்லூரி,

**தரம் 4 தனியாள் பெண்**

1ஆம் இடம் ஞா.சாரன்னியா புனித சென்திரேசாள் மகளிர் கல்லூரி, 2ஆம் இடம் தே.சங்கீர்த்தனா புனித சென்திரேசா மகளிர் கல்லூரி, 3ஆம் இடம் மு.கிவ்வியா கோப்பாய் நாவலர்

**குழு 13வயது ஆண்**

1ஆம் இடம் அச்சுவேலி மத்திய கல்லூரி, 2ஆம் இடம் கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம், 3ஆம் இடம் இடைக்காடு மகா வித்தியாலயம்

**13வயதுப் பெண்**

1ஆம் இடம் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்,2ஆம் இடம் கோப்பாய் மகாவித்தியாலயம், 3ஆம் இடம் புனித சென்திரேசாள் மகளிர் கல்லூரி

**தரம்5 ஆண்**

1ஆம் இடம்கோப்பாய் நாவலர் வித்தி, 2ஆம் இடம் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி, 3ஆம் இடம் புனித செந்திரேசா மகளிர் கல்லூரி .

**தரம் 5 பெண்**

1ஆம் இடம்கோப்பாய் நாவலர், 2ஆம் இடம் புனித சென்திரேசாள் மகளிர் கல்லூரி,3ஆம் இடம் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.(அ)

போவது சரியான பாதையாக இல்லாதபோது வேகமாக ஓடுவதால் என்ன பயன்?

– ஜேர்மன்

வலம்புரி

## கௌதம புத்தருக்கு இழுக்கைத் தேடும் பிரதமர் ரட்ணசிறியின் மதவாதம்

இலங்கை பௌத்த இராச்சியம். எனவே இங்கு ஒருபோதும் பயங்கரவாதம் வெற்றி பெற முடியாது. இவ்வாறு இந்த நாட்டின் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறியுள்ளார்.

பயங்கரவாதத்தை முறியடிப்போம் எனக் கூறிய பிரதமர், இந்த நாடு பௌத்த நாடு என்று கூறியுள்ளமை வேடிக்கையானது.

இருபத்தொராம் நூற்றாண்டில்–உலகமயமாக்கல் என்ற சிந்தனை பாய்ச்சப்பட்டிருக்கும் வேளையில் இலங்கை பௌத்த நாடு எனக் கூறுவது எவ்வளது தூரம் இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் குறுகிய சிந்தனைக்குள் அகப்பட்டுள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

அண்டை நாடான இந்தியாவில் நூறு கோடி மக்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி வாழ்கின்றனர். அங்கு இந்தியன் என்ற தேச உணர்வே காணப்படுகின்றது.

ஆனால் மிகச் சிறிய நாடான இலங்கையில் பௌத்த மதம் என்ற மதவாத சிந்தனை தலைக்கேறி ஆட்சியாளர்கள் பித்தச் செருக்கில் ஏதோ கதைக்கின்றார்கள்.

இலங்கை பௌத்த நாடு என்ற மதவாதம் இருக்கும் வரை இந்த நாட்டில் பயங்கரவாதத்தை ஒருபோதும் ஒழிக்க முடியாது. ஏனெனில் இலங்கை பௌத்த நாடு என்பதே பயங்கரவாதமாகும்.

இந்த நாடு பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் எனப் பல்வகைச் சமயங்களுக்கும் உரித்துடையது எனக் கூறப்படுமாயின் – இலங்கை எல்லா இன மக்களுக்கும் உரித்துடையதென்ற சட்டவாக்கம் இருக்குமாயின் நாட்டில் அமைதியும் சமாதானமும் இயல்பாகவே ஏற்பட்டு விடும்.

இதைவிடுத்து இலங்கை பௌத்த நாடு என்று கூறப்படுமாயின், மனித வாழ்வியல் பற்றிய சிந்தனைகளை, தர்மக் கருத்துக்களைப் போதித்த கௌதம புத்தபிரான் வேதனைப்படுவார்.

பிரதமரின் கருத்து அவரின் செவிகளில் சென்றடைந்திருக்காது. ஏனெனில் அவர் தீய சொற்களை–மக்களை மதவாதத்திற்குள் தள்ளிவிடும் அறிவிப்புக்களை ஒருபோதும் கேட்க விரும்ப மாட்டார்.

எனவே பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க போன்றவர்கள் கௌதம புத்தபிரானுக்கு உதவுவதாக இருந்தால், அவரின் உயர்ந்த அகிம்சைக் கோட்பாடுகளை இந்த நாட்டில் அமுல்படுத்த வேண்டும். அதுவே தேவையானதாகும்.

# இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து இன்று கம்யூனிஸ்ட் கட்சி உண்ணாவிரதப்போராட்டம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து இன்று கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகக் கிளையினர் உணவுத் தவிர்ப்பு போராட்டம் ஒன்றினை நடாத்தவுள்ளனர்.

தமிழக கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டி.பாண்டியன் தலைமையில் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. இந்தப் போராட்டத்திற்கு அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவி ஜெயலலிதா ஜெயராம் தமது ஆதரவை வெளியிட்டுள்ளார். இலங்கைத் தமிழர்களுக்காக தமது கட்சி இதய பூர்வமான ஆதரவை வெளிப்படுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார். விஜயகாந் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிட கழகமும் இந்தப் போராட்டத்திற்கு தமதுஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளது.

### பாட்டாளி மக்கள் கட்சி எச்சரிக்கை

இதேவேளை இன்னும் 18நாட்களுக்குள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழக சட்டப்பேரவையில் தமிழக அரசாங்கத்தால் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை யானால் தமதுசட்டத்தை உறுப்பினர்கள் சட்ட மன்றப்பேர வைக்குள் உணவுத்தவிர்ப்பு போராட்டத்தினை மேற்கொள்வார் என பாட்டாளி மக்கள் கட்சியின் உறுப்பினர் எஸ். இராமதாஸ் எச்சரித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்துநேற்று முன்தினம் ஆழ்வார்பேட்டையில் இடம்பெற்ற போராட்டம் ஒன்றிலேயே இந்த எச்சரிக்கை அவர் விடுத்துள்ளார்.

### வை.கோ மறியல் போராட்டம்

இதற்கிடையில் வை.கோபாலசாமியின் தலைமையிலான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து எதிர்வரும் 10 ஆம் திகதி சென்னையில் மறியல் போராட்டம் ஒன்றிணை நடாத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

### கருணாநிதி பொதுக்கூட்டத்திற்கு அழைப்பு

இலங்கைத்தமிழர்களுக்கான போராட்டங்களை நடத்துவதாக அறிவித்திருக்கும் தமிழக எதிர்க்கட்சிகள் முதல்வர் கருணாநிதியை திராவிட முன்னேற்றக்கழக அரசாங்கம் தமிழர்விடயத்தில் உரிய முனைப்புகளை மேற்கொள்ள வில்லை என குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்நிலையில் எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வகையில் முதல்வர் கருணாநிதி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதன் படி எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட் கிழமை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் திராவிட முன் னேற்றக் கழகத்தின் நிலைப்பாடும் மத்திய அரசாங்கத்திற்கான வேண்டுகோளும் என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் ஒன் றுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னை மயிலை மாங் கொல்லையில் இந்தப் பொதுக் கூட்டம் இடம்பெறவுள்ளது. இதன் போது இலங் கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக முதல் வரின் நிலைப்பாடு வெளி யிடப் படும் என திராவிட முன்னேற் றக்கழகம் தெரிவித் துள்ளது.

இதேவேளை இந்தக்கூட்டத்தின் பின்னர் தமிழகத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தீவிர அரசியல் பிரச்சினையாக முன்கொண்டு செல்லப்படும் சாத்தியங்கள் இருப்பதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. (அ–6)

# உயர் நீதிமன்ற தீர்ப்புகளை உடனடியாக அமுல்படுத்தவும்

### ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

அண்மைக்காலமாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நீதிமன்றத்தின் செயற்பாடுகளை சீர் குலைக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இதேவேளை அரசாங்கத்தின் இந்த செயற்பாட்டிற்கு ஐக்கிய தேசியக்கட்சி தமது எதிர்ப்பை தெரிவிப்பதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அறிக்கை ஒன்றின் மூலம் குறிப்பிட்டுள்ளார். (அ)

# கணித,விஞ்ஞான ஆசிரியர்களுக்கு மன்னார் மாவட்டத்தில் வெற்றிடம்

(கொழும்பு)

பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் பொருட்டு கடந்த 2007ஆம் ஆண்டு போட்டிப்பரீட்சை மூலம் 387 பட்டதாரி ஆசிரியர்களுக்கு வட மாகாணத்தின் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் வலயக் கல்விப்பணிமனைக்கு உட்பட்ட பாடசாலைகளில் 32 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப் பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மன்னார் மாவட்டத்தில் கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங் களுக்கு ஆசிரிய வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இந்நிலையில் விஞ்ஞான பாடங்களை கற்பிக்கக்கூடிய மன்னார் மாவட்டத்தில் சேவை ஆற்ற விரும்பும் யாழ்ப்பாண மாவட்ட ஆசிரியர்கள் தங்கள் விண்ணப்பங்களை வட மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் எம். அபெல் ரவல் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

# எல்லாம் வல்ல பகவான் பாபா

அமெரிக்கப் பெண் ஒருத்தி, அவள் பாபாவின் பக்தை. அவருடைய கணவருக்கு பாபாவிடத்தில் நம்பிக்கை இல்லை. பாபாவைப் பற்றி குறை சொல்லிக்கொண்டிருப்பதே அவருக்கு வழக்கம். புட்டபர்த்தியிலுள்ள பிரசாந்தி நிலையத்திற்கு வருமாறு கணவரை அந்தப் பெண் வற்புறுத்தினாள் .ஒரு முறை யாவது வந்து பாருங்கள் என வேண்டிக் கொண்டாள். வருவதற்கு அவர் ஒரு நிபந்தனை விதித்தார். பாபாவைப் பார்க்க அனுமதி கிடைத்தால். அவருடைய தெய்வீக சக்தியை நிரூபித்துக்காட்டும்படி அவருக்கு சவால் விடுவேன் அது உனக்கு சம்மதமா எனக் கேட்டார். அவர் புட்டபர்த்தி வரும் வாய்ப்பு கிடைத்தது. பாபாவையும் சந்திக்க நேரிட்டது. பாபாவின் அறையில் இருந்தபோதே அவர் பாபாவிடம், ‘நீங்கள் வீபூதி, தாயத்துக்கள் போன்றவற்றை வரவழைப்பதற்கு நான் முக்கியம் வழங்க மாட்டேன். உயிருள்ள ஒன்றை வர வழைத்தால் மட்டுமே உங்களுடைய தெய்வீக ஆற்றலை நான் ஒப்புக் கொள்வேன்’ என்றார்.

சிறு நேரத்தில் பாபா அவரைப் பார்த்து கைகளைக் காட்டி, ‘என் கைகளைப் பாருங்கள் இதில் ஒன்றும் இல்லை அல்லவா?’ எனக் கேட்டார்.அவரும் இல்லை என்றார்.வலது உள்ளங்கையை இடது உள்ளங்கை மேல் வைத்து மூன்று முறை திறந்து காட்டினார். கையில் ஒன்றும் இல்லை என்கிற முழு நம்பிக்கை ஏற்படுத்திய பிறகு, ‘உயிருள்ள எதை நான் உருவாக்க வேண்டும்?’ எனக் கேட்டார். ‘குரங்கை உருவாக்குங்கள்’ என்றார். உடனே பாபா ஒரு கையை நான்கு அங்குலம் மேலே உயர்த்தினார் அவ் அமெரிக்கர் துள்ளி குதித்தார். குரங்குக் குட்டி எவ்வளவு அழகாக இருக்கிறது.என வியந்தார். பாபா கையை எட்டு அங்குலத்திற்கு உயர்த்த குரங்கு பெரிதாக கத்தியது. 15 அங்குலத்திற்கு கையை உயர்த்த முழுமை பெற்ற குரங்கு அங்கும் இங்கும் தாவியது.



அமெரிக்கருக்கு ஒன்றும் புரிய வில்லை .அவமானத்தால் குன்றினார். பகவானிடம் மன்னிப்புப் பெறத் துடித்தார். பாபாவிடம் உரையாட விரும்புவதாக கூறினார்.

பாபாவின் காலில் விழுந்து மன்னிப்பு வேண்டினார். ‘எங்கிருந்தோ ஒன்றை என்னால் சிருஷ்டிக்க முடியும் என்றால் அதை இல்லாமல் செய்வதும் எனக்குத்தெரியும்’ என்ற பாபா குரங்கை அழைத்து அதன் தலையை தன் கையால் அமர்த்த அது மறைந்தே போயிற்று.

பகவானைப் பொறுத்தவரையில் இதய சுத்தியோடு சந்தேகித்தவர்களின் சந்தேகங்களைச் தீர்த்து வைத்திருக்கிறார் என்பதற்கு மேற்கூறப்பட்டது போன்ற சம்பவங்களை மேற்கோள்காட்ட முடியும்.

ஜெய்சாயிராம்

யாதவன்

# தாயக உரிமைக்காகப் போராடும் தமிழர்கள் பசியுடனும் போராடுகிறார்கள் என்பதே உண்மை

## பேராசிரியர் சுப. வீரபாண்டியன்

சென்னையில் நடைபெற்ற ஆர்பாட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், ஈழத்தில் தாயக உரிமைக்காக இராணுவத்துடன் போராடி வரும் நமது தமிழர்கள் ஆயுதம் ஏந்தி போராடுவதுடன் பசியுடனும் போராடி வருகிறார்கள் என்பதுதான் உண்மை.

இதனை சர்வதேச சமூகம் உணர்ந்து கொண்டு பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். ஈழத்தில் இறையாண்மை பாதிக்கப்படக் கூடாது என்று சிலர் வலியுறுத்துகிறார்கள். அவர்களுக்காக சில விளக்கங்களை முன் வைக்கிறேன். சுவீடன் நாட்டிலிருந்து நோர்வே பிரிந்து சென்ற போது சுவீடனின் இறையாண்மை பாதிக்கப்படவில்லையே.அதே போல் இந்தோனேஷியாவிலிருந்து கிழக்குத் தீமோர் பிரிந்து சென்றபோது இந்தோனே ஷியாவின் இறையாண்மை பாதிக்கப்படவில்லையே.

அதனால் தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன். இலங்கையில் இருந்து தனி ஈழம் பிரிவதால் அந்நாட்டின் இறையாண்மை பாதிக்கப்படாது. அதையும் மீறி இறையாண்மை என்று சொல்வது தமிழர்களுக்கு உரிமை வழங்க மறுப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஆயுதம் என்றே பொருள் கொள்ளலாம்.

எந்த ஒரு நாட்டையாவது மற்றொரு நாடு தாக்கினால் பிறிதொரு நாடு தாக்குதலுக்கு ஆளாகும் நாட்டை தாங்கும். சமீபத்தில் தாக்குதலுக்கு ஆளான ஈராக் வரை இது தான் வரலாறு.

ஆனால் உலகத்தில் உள்ள எந்த நாடும் ஆதரிக்காமல் மண்ணின் உரிமைக்காக தொடர்ச்சியாக தளர்ச்சியில்லாமல் போராடுவது நம் ஈழ மக்கள். உலக நாடுகளில் ஒன்று கூட இதனை ஆதரிக்காததேன்? ஏனெனில் எந்த ஏகாதிபத்தியத்திற்கும் அடிபணியாமல் தேச விடுதலைக்கான போராட்டம் இது என்பதே காரணம்.

ஒரு கட்டத்தில் இது போன்ற போராட்டங்கள் தனது நிலையை மாற்றிக் கொண்டு மக்கள் வீறு கொண்டு எழுப்போகிறார்கள். இதற்காக கட்சி அரசியல் நடத்துகிறவர்கள் இப்போதாவது விழித்துக் கொள்ளவில்லையென்றால் அதிலும் குறிப்பாக மத சார்பின்மை பேசும் காங்கிரஸ் கட்சி விழித்துக் கொள்ளவில்லை யென்றால் அந்த கட்சி இந்த மண்ணிலிருந்து அந்நியப்பட்டுப் போகும்.

இப்பிரச்சினையில் தமிழக ஊடகங்களும் இந்திய ஊடகங்களும் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிடுகின்றன. இந்த போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதம் ஆகியவை தொடர்ந்து முன்னெடுக்கப்படும். ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக யார் போராட்டம் நடத்தினாலும் அதனை வரவேற்போம். நாடு அடைவது உறுதி என்றார்.(அ-6)

# விடுதலைப்புலி என விக்ரமபாகு கருணாரட்ணவுக்கு கனடா விசா வழங்க மறுத்தமை ஆச்சரியமானது

## மனோகணேசன் தெரிவிப்பு

புதிய இடது சாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ணவின் செயற்பாடுகளின் மூலம் அவரை விடுதலைப்புலிகளின் உறுப்பினர் எனக்கூறி இலங்கையில் உள்ள கனேடிய தூதரகம் விசா வழங்க அனுமதி மறுத்திருப்பதானது, இலங்கையில் சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருப்பதாக மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், போருக்கு எதிரானவர்கள், ஊடகவியலாளர்களை மாத்திரமன்றி வெளிநாட்டு பிரஜைகளையும் புலிகள் என முத்திரை குத்தும் செயற்பாடு கனேடிய தூதரகத்தின் இந்த நடவடிக்கைக்கு நிகரானது எனவும் மனோ கணேசன் கூறியுள்ளார்.

**89இல் ஜே.வி.பிக்காக குரல் கொடுத்தவர்**

1989ஆம் ஆண்டு ஆயிரக்கணக்கான ஜே.வி.பியின் உறுப்பினர்கள் அரச ஒடுக்குமுறைக்கு உள்ளாககபபட்ட போது கருணாரட்ண அதற்கு எதிராகக் குரல் கொடுத்தார்.

அதேபோல அவர் தற்போது தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் கடத்தல்கள், கொலைகளுக்கு எதிராக செயற்பட்டு வருவதாக மனோ கணேசன் சுட்டிக் காட்டியுள்ளார். விக்கிரமபாகுவுடன் இணைந்து ஜே.விபியினருக்கு எதிரான ஒடுக்கு முறையின் போது குரல் கொடுத்தவர்கள் பலர் தற்போது அணியை மாற்றிக் கொண்ட நிலையில் தற்போதுமேற்கொள்ளப்படும்அவ்வாறானஒடுக்குமுறைக்கு பொறுப்பாளிகளாக மாறி யுள்ளனர்.

தமிழ், முஸ்லிம் மக்களுக்காக குரல் கொடுக்கும் சிங்கள அரசியல்வாதிகள் சிலரில் விக்கிரமபாகு கருணாரட்ணவும் ஒருவர். அவர் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டுள்ளார்.

அன்று ஜே.வி.பியினருக்கு எதிரான ஒடுக்கு முறைக்கு குரல் கொடுத்த போது ஜே.வி. பி. என முத்திரை குத்தப்படாத அவருக்கு தற்போது புலி முத்திரை குத்தப்பட்டுள்ளதாக மனோ கணேசன் சுட்டிக் காட்டியுள்ளார்.

கனடாவின் ரொறண்டோ நகரில் நடைபெற்ற 1983ஆம் ஜுலையின் 25வருடங்களின் பின்னர் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருதல், இலங்கையில் நியாயம் மற்றும் அமைதியை ஏற்படுத்துவது குறித்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக விக்கிரமபாகு கனேடிய தூதரகத்தில் விசா அனுமதிக்கான விண்ணப்பத்தை கோரியிருந்தார்.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை முடிவுக்கு கொண்டு வந்து நியாயமான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என குரல் கொடுக்க நம்மவர்கள் தவறியுள்ள சந்தர்ப்பத்தில், கனடா சகல இலங்கையருக்கும் தவறான சமிக்ஞையை வெளிப்படுத்தியிருப்பதாக மனோ தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# தொடர்ச்சியாகச் சொற்பொழிவு ஆற்றி ஸ்ரீ ஜெகதீஸ்வரசர்மா புதிய சாதனை

(பருத்தித்துறை)

தொடர்ச்சியாக ஒன்பதரை மணித்தியாலங்கள் கல்வியைப் பற்றி இடைவிடாது பேசி



உலக சாதனை படைத்துள்ள இந்து மறுமலர்ச்சி ஆதீன முதல்வர் செஞ்சொற்சாகரம் சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வரதேசிகர். இவர் ஏற்கனவே மகாபாரதம் பற்றி தொடர்ந்து இடைவிடாது 9மணித்தியாலங்கள் பேசிச் சாதனை படைத்தவர். அல்வாய் கோயில் தோட்டம் ஸ்ரீ ஜெகதீஸ்வரம் தேவஸ்தான திருப்பணி நிதிக்காக இச்சாதனை புரியப்பட்டது.

28ஆம்திகதி காலை 7.45 மணிக்கு ஆரம்பித்து கம்பர்மலை அரசினர் வித்தியாலயத்தில் "எனது பார்வையில் கல்வி உலகு நேற்று இன்று நாளை" என்னும் பொருள் பற்றி இடைவிடாது தொடர்ந்து 9 1/2 மணித்தியாலங்கள் பேசிச் சாதனை நிகழ்த்தியுள்ளார். இச்சாதனை நிகழ்வு சிறுநீரகம் பாதிக்கப்பட்டு நோய் வாய்ப்பட்டிருக்கும் சிவஸ்ரீ ஏ. ஸ்ரீதரன் ஐயாவின் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கான நிதி சேகரிப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்று சாதனை நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இச்சாதனை கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நிகழ்வுக்கு கம்பர்மலை அரசினர் வித்தியாலய அதிபர் எஸ். கிருஷ்ணகுமார் தலைமை தாங்கினார். கொம்மாந்துறை மனோன்மணி அம்பாள் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ஆர்.பாலகிருஷ்ணக் குருக்கள் ஆசிவழங்கினார். கம்பர்மலை அரசினர் வித்தியாலய பிரதி அதிபர் எஸ்.தேவராஜா ஆரம்ப உரை நிகழ்த்தினார். எந்தவிதமான எழுத்துக் குறிப்புகளுமின்றி ஞாபகசக்தி மூலம் பேசிச் சாதனை நிகழ்த்தினார். கல்வி பற்றிய முக்கிய கருத்துக்கள் இவரது பேச்சில் அடங்கியிருந்தன. பிற்பகல் 5.15 மணிக்குச் சாதனைப் பேச்சு முடிபுற்றது.

வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ எஸ்.தண்டபாணி தேசிகர் (ஜே.பி),வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் ஆகியோர் இவரது உலக சாதனையைப் பாராட்டி உரையாற்றினர்.

இவ் உலக சாதனையின் மத்தியஸ்தர்களாக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக அதிகாரிகள் ,வடமராட்சிவலயத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் ஆகியோர் கடமையாற்றினர்.

ஐக்கிய நாடுகள் சபையில் கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ரோ 41/2 மணித்தியாலங்கள் பேசி நிகழ்த்திய உலக சாதனையை 2002 ஆம் ஆண்டு சோகல்லோ சண்முகம் அவர்கள் கொழும்பு தமிழ்ச்சங்க ஏற்பாட்டில் "இலக்கிய நயம்" என்னும் பொருளில் ஏழரை மணித்தியாலங்கள் பேசி முறியடித்தார். இச்சாதனையை அழகு ஜெகதீஸ்வர தேசிகர் 9மணித்தியாலங்கள் தொடர்ந்து பேசி கடந்த வருடம் அக்டோபர் மாதம் முறியடித்திருந்தார். தற்போது 9 1/2 மணித்தியாலம் தொடர்ந்து பேசி உலக சாதனை புரிந்துள்ளார்.

அழகு ஜெகதீஸ்வர தேசிகரின் தந்தை அழகுதுரை இளைப்பாறிய அதிபராவர். தாய் ஜானகி அம்மா யாழ்.பல்கலைக்கழக பட்டதாரியாவார். இவர் யாழ்.பல்கலைக்கழக தொழில் நிர்வாகமாணிப் பட்டம் பெற்ற ஆசிரியராவர். இவர் வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியரும் சிறந்த சமயப் பேச்சாளருமாவார். (அ-52)

# நீதிமன்ற உத்தரவை விமர்சித்த அரசாங்க தொலைக்காட்சிகளுக்கு எதிராக வழக்கு

காலி வீதியில் அமைக்கப்பட்டுள்ள வீதித் தடைகளை அகற்றுவது தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை விமர்சிக்கும் வகையில் அரசாங்கத் தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சிகள் ஒளிபரப்புச் செய்யப்பட்டுள்ளன. தேசிய ரூபவாஹினி மற்றும் சுயாதீனத் தொலைக்காட்சி ஆகிய அரசாங்க தொலைக் காட்சி அலைவரிசைகளில் உயர் நீதிமன்றத் தீர்ப்பு கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது. நாட்டின் அதி உயர் பீடமாக கருதப்படும் நீதி மன்றக் கட்டமைப்பை அவமரியாதைக்குட்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புச் செய்தமைக்காகக் குறித்த தொலைக்காட்சி சேவைகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது. குறித்த தொலைக்காட்சி அலைவரிசைகளின் பணிப்பாளர்கள், குறித்த நிகழ்ச்சியைத் தயாரித்து ஒளிபரப்புச் செய்த தயாரிப்பாளர்கள் உள்ளிட்டோருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தக்கல் செய்யப்படவுள்ளது.

இதேவேளை உயர் நீதிமன்றத்தின் உத்தரவு தொடர்பான எழுத்து மூல உத்தரவு கிடைக்கப்பெற்றவுடன் வீதித் தடைகள் அகற்றப்படும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

காலி வீதியில் அமைந்துள்ள வீதித்தடைகளை உடனடியாக அகற்றமாறு உயர் நீதிமன்றம் திங்கட்கிழமை உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

# கொழும்பினதும் கிழக்கினதும் பாதுகாப்பினை முறியடிப்பதே புலிகளின் திட்டம்

## கொழும்பு ஆங்கில வாரஏடு தெரிவிப்பு

கொழும்பு மற்றும் கிழக்கு மாகாணம் ஆகியவற்றின் பாதுகாப்புகளைஆட்டகாண வைப்பதே தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய நோக்கம் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் த பொட்டம்லைன் ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த வார ஏட்டின் பாதுகாப்பு பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள், வன்னியில் மோதல்கள் தீவிரமடைந்து வருகையில் தலைநகர் கொழும்பு மற்றும் கிழக்கு மாகாணம் போன்றவற்றின் மீது அதிரடி தாக்குதல்களை நிகழ்த்துவது விடுதலைப் புலிகளின் பிரதான இலக்கு.

இதனால் வன்னியில் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் படையினர் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளலாம். கொழும்பில் தாக்குதலில் ஈடுபடும் நோக்குடன் விடுதலைப் புலிகள் பலர் முஸ்லிம் மக்களின் பெயர்களைக் கொண்ட அடையாள அட்டையுடன் நடமாடி வருகின்றனர்.

கொலன்னாவ எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, இரத்மலான இடைத் தங்கல் முகாம், இரத்மலான வானூர்தி நிலையம், கட்டுநாயக்கா வான்படை தளம் என்பனவே கொழும்பில் அவர்களின் பிரதான இலக்கு.

கிழக்கில் அம்பாறை மற்றும் திருமலை மாவட்டங்களில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இதனிடையே அனைத்துலக ரீதியிலும் தமிழ் மக்கள் போர் தொடர்பான பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தென்னிந்தியாவில் நடைபெறவுள்ள உண்ணாநிலை போராட்டம் முக்கியத்துவம் மிக்கது.எனினும் அது தொடர்பாக மத்திய அரசின் பதில் என்ன என்பது தான் தற்போதைய கேள்வி என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# பாடசாலைகளுக்கிடையிலான இருபது-20 கிரிக்கெட் தொடர்

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் புறக்கணிப்பு

(கொழும்பு)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் போட்டிகளை சர்வதேச மட்டத்திற்கு இனம் காட்டிக் கொள்ள இலங்கை கிரிக்கெட் ஸ்போட்ஸ் பெஸ்ட் இலங்கை, பாடசாலை கிரிக்கெட் சபை ஆகியன இணைந்து நடத்தும் சுப்பர் இருபது-20 போட்டி இலங்கை பாடசாலை விளையாட்டுத் துறையில் ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப் போட்டியில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகள் தெரிவு செய்யப்படாத நிலையில் சகல மாவட்டங்களில் இருந்தும் 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட மாணவர்களை உள்ளடக்கிய மாகாணங்களுக்கிடையிலான இருபது-20 போட்டியை ஸ்போட்ஸ் பெஸ்ட் ஏற்பாடு செய்துள்ளது.

கிராமிய மட்டத்திலும் நகர மட்டத்திலும் திறமையை வெளிப்படுத்தும் வீரர்களைத் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அறிமுகப்படுத்தும் நோக்கில் இப் போட்டியை மஹாராஜா தொலைக்காட்சி நிறுவனமும் மஹாராஜா ஒலிபரப்பு நிறுவனமும் ஏற்பாடு செய்துள்ளன. முதலில் மாகாண மட்டத்தில் இப் போட்டிகள் நடைபெற்று அதில் திறமையான அணி முதலில் தெரிவு செய்யப்படும்.

இவ் அணிக்கு இம் மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான புதிய பெயர் சூட்டப்படும். இப்படி ஒவ்வொரு மாகாணத்தில் இருந்தும் திறமையான ஒரு அணி தெரிவு செய்யப்பட்டு பெயர் சூட்டப்படும்.

பாடசாலை மட்டத்தில் இருபது-20 போட்டியை நடத்துவதன் மூலம் திறமையான பாடசாலை மாணவர்களுக்கு நல்ல வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படுவது மட்டுமல்லாமல் பாடசாலை மட்டத்தில் உள்ள கிரிக்கெட் போட்டிகளை சர்வதேச மட்டத்திற்குத் தரம் உயர்த்துவதே இப் போட்டியின் குறிக்கோளாகும். இதன் மூலமும் இலங்கைக் கிரிகெட்டில் உள்ள ஒரு பாரிய வெற்றிடத்தை பூரணப்படுத்த முடியும்.

ஸ்போட்ஸ் பெஸ்ட் இருபது -20 போட்டி இம் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட போட்டிகள் தம்புள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப் போட்டியில் மேல் மாகாண மட்டத்தில் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 4 அணிகளும் வட மத்திய மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி மாத்தளை, குருநாகல், அநுராதபுரம், பொலனறுவை அணிகளும் தென் மாகாணத்திலிருந்து காலி, மாத்தறை , அம்பாந்தோட்டை அணிகளும் மத்திய மாகாணத்திலிருந்து கண்டி, கேகாலை, நுவரெலியா அணிகளும் மேல்மாகாணத்திலிருந்து கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்குப் பிரிவுகளிலிருந்து கம்பஹா, புத்தளம், களுத்துறை, இரத்தினபுரி அணிகளும் ஊவா மாகாணத்திலிருந்து பதுளை, அம்பாறை, மொணறாகல அணிகளும் கலந்து கொள்கின்றன.

மொத்தம் 24 மாவட்ட அணிகளுக்கிடையில் 30 போட்டிகள் நடைபெறுகின்றன.

இவற்றிலிருந்து தெரிவு செய்யப்படும் 10 திறமையான அணிகளுக்கிடையிலான இருபது-20 போட்டிகள் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி முதல் நடைபெறும். இறுதிப் போட்டி பகல் இரவுப் போட்டியாக ஆர்.பிரேமதாச விளையாட்டரங்கில் நடைபெறும்.

## ஜேர்மனி டென்னிஸ்; 2-வது சுற்றில் வீனஸ்

(ஸ்டட்கார்ட்)

ஜேர்மனி ஸ்டட்கார்ட் நகரில் சர்வதேச பெண்கள் டெனிஸ் தொடர் நடந்து வருகின்றது. இதன் முதல் சுற்றுப் போட்டியில் அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் ஜேர்மனி வீராங்கனை அனாலெனாவை 6:1, 6:2 என்ற செட்டில் தோற்கடித்து 2-வது சுற்றுக்கு முன்னேறினார்.

ரஷ்ய வீராங்கனை நாடியா பெட்ரோவா, செக்குடியரசு வீராங்கனை பார்பராரோவை 6:2, 6:2 என்ற நேர் செட்டில் வீழ்த்தினார். பிரான்ஸ் வீராங்கனை பர்டோலி, சுவோலேக்கியா வீராங்கனை டோமினி காவை 6:3, 6:1 என்ற செட்டில் தோற்கடித்தார்.

## டெண்டுல்கர் சாதனை படைக்க அனுமதியோம் என்கிறார் பொன்டிங்

(ஐதராபாத்)

டெஸ்ட் தொடரில் சாதனை படைக்கக் காத்திருக்கும் டெண்டுல்கருக்குக் கடும் நெருக்கடி கொடுக்கப்படும் என அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொன்டிங் சவால் விடுத்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணி 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க இந்தியா வந்துள்ளது. முதல் டெஸ்ட் போட்டி பெங்களூரில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இத் தொடரில் டெண்டுல்கர் 77 ஓட்டங்கள் எடுத்தால் டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்கள் எடுத்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் வீரர் லாராவின் சாதனையை (11 ஆயிரத்து 953 ஓட்டங்கள்) முறியடிக்கலாம்.

டெண்டுல்கர் தற்போது 11 ஆயிரத்து 877 ஓட்டங்களுடன் இரண்டாம் இடத்தில் உள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4 டெஸ்ட் போட்டிகளில் 77 ஓட்டங்களை எடுத்துச் சாதனை படைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஓட்டங்களை எளிதாக எடுக்க முடியாது என்கிறார் பொன்டிங். இது குறித்து அவர் அளித்த பேட்டியில்,

டெண்டுல்கர் சிறந்த கிரிக்கெட் வீரர். இவரிடம் எனக்கு அதிக மரியாதையுள்ளது. டெஸ்ட் தொடரில் இவரது ஓட்ட வேட்டையைக் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சாதனைக்குத் தேவையான 77 ஓட்டங்களை எளிதாக எடுக்க அனுமதிக்க மாட்டோம். இந்தத் தொடரில் சாதனை படைக்க மாட்டார் என நம்புகின்றேன். அவுஸ்திரேலிய அணியில் கடந்த ஒன்றரை ஆண்டு காலம் அனுபவ வீரர்கள் இடம்பெறாமல் இருப்பது ஒரு குறையாகவுள்ளது.

இருப்பினும் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது. அணியில் இடம்பெற்றுள்ள அனுபவம் இல்லாத வீரர்கள் பற்றி பல விமர்சனங்கள் எழுகின்றன.

இவர்களுக்கு இந்திய ஆடுகளத்தில் விளையாடிய அனுபவம் இல்லை. ஆனால் கிரிக்கெட்டில் தேவையான அனுபவம் பெற்றுள்ளனர். இரு அணிகளுக்குமிடையில் ஏற்பட்ட கசப்புணர்வு இயல்பாக இருப்பதை விட செயற்கையாக மிகைப்படுத்திக் காட்டப்படுகின்றது.

கிரிகெட்டில் சொற்போர் தவிர்க்க முடியாத ஒன்று. கிரிக்கெட் போட்டியைப் பொதுமக்கள் மற்றும் ஊடகங்கள் உன்னிப்பாகக் கவனித்து வருவதால் வீரர்கள் உண்மையான விளையாட்டு உணர்வை வெளிப்படுத்துவது அவசியம். இது இரு அணித் தலைவர்களின் கையில் உள்ளது.

டில்லிப் பாதுகாப்புக் குறித்து அணி வீரர்களுடன் கலந்து பேசவில்லை. தற்போது டெஸ்ட் தொடரில் கவனம் செலுத்த விரும்புகின்றேன். அவுஸ்திரேலிய அணிக்குச் சிறந்த பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகின்றது.

எங்கள் பாதுகாப்பு அதிகாரிகள் அவ்வப்போது இது குறித்துத் தகவல்களைத் தெரிவித்து வருகின்றனர். கிரெக் செப்பல் அணியின் துணைப் பயிற்சியாளராக இருப்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

அவர் இந்தியாவின் பயிற்சியாளராக இருந்ததால் அவர்களைச் சமாளிக்கத் தேவையான ஆலோசனை வழங்குவார் என பொன்டிங் கூறினார்.

# ஒரு நாள் போட்டி விதிகளில் நேற்று முதல் புதிய மாற்றம்

(டுபாய்)

சர்வதேச ஒரு நாள் போட்டியில் புதிய விதிகளை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அறிவித்துள்ளது.

இவ் விதிகள் நேற்று முதல் நடைமுறைக்கு வருகின்றன. ஒரு நாள் போட்டிகளின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் புதிய விதிமுறைகளை ஐ.சி.சி. நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் நடந்த ஐ.சி.சி. உறுப்பு நாடுகளின் கூட்டத்தில் இவ் விதிகள் அனைவராலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. நேற்று முதல் இவ் விதிகள் நடைமுறைக்கு வரும் என ஐ.சி.சி. தெரிவித்துள்ளது. புதிய விதிகள் வருமாறு,

### பவர் பிளே

ஒரு நாள் போட்டிகளில் இதுவரை மூன்று பவர் பிளே (10+5+5) ஓவர்கள் நடைமுறையில் உள்ளன. இதில் முதல் பத்து ஓவர்கள் என்பது பொதுவானவை. அடுத்து பத்து ஓவர்கள் இரண்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டு வந்தன.

இவை இரண்டும் பந்து வீச்சுச் செய்யும் அணியின் விருப்பத்திற்கு உட்பட்டிருந்தன. முதல் பத்து ஓவர்கள் தவிர்ந்த மற்ற 40 ஓவர்களுக்குள் எப்பொழுது வேண்டுமானாலும் பந்து வீச்சுச் செய்யும் அணி 2 மற்றும் 3-வது பவர் பிளேயை உபயோகித்துக் கொள்ளலாம்.

தற்போது இதில்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கடைசி 2 இல் ஒன்றை மட்டுமே பந்து வீச்சுச் செய்யும் அணி தேர்வு செய்யமுடியும். மற்றொரு பவர் பிளேயை துடுப்பாட்டம் செய்யும் அணி தேர்வு செய்யும் வகையில் புதிய விதி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

### மூன்று களத் தடுப்பாளர்கள்

2-வது மற்றும் 3-வது பவர் பிளே ஓவர்களில் 90 அடிக்கு வெளியே 3 களத் தடுப்பாளர்கள் நிற்கலாம் எனப் புதிய விதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன் இவ்விரண்டு பவர் பிளே ஓவர்களில், ஏதேனும் ஒன்றில் மட்டுமே 3 களத் தடுப்பாளர்கள் 90 அடி தூரத்திற்கு வெளியே நிற்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

### நடுவர்களுக்குச் சுதந்திரம்

சந்தேகத்திற்கு இடமளிக்கும் பிடிகளை களத்தில் நிற்கும் நடுவர்கள் 3-வது நடுவரிடம் கேட்டு பின் தீர்ப்பளிக்கலாம். ஆனால் இறுதி முடிபை பந்து வீச்சு முனையிலுள்ள நடுவர்தான் அளிக்க வேண்டும்.

அவர் முடிபு செய்ய முடியாத பட்சத்தில் ஆட்டம் இழப்பு இல்லை என அறிவிக்கப்படும். தவிர முதலில் துடுப்பாட்டம் செய்யும் அணி அதிக நேரம் எடுத்துக் கொண்டால் இடைவேளை நேரத்தை 45 நிமிடத்திலிருந்து 30 நிமிடமாக நடுவர்கள் குறைத்துக் கொள்ளலாம் எனவும் புதிய விதி வடிவமைக்கப்பட்டுள்ளது.

### வீணான ஓய்வில்லை

போட்டியின் போது காயம், உடல் நலக் குறைவு மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களுக்காக மட்டுமே வீரர்களுக்கு ஓய்வளிக்கப்படும். அச் சமயம் பதில் வீரர்கள் களமிறங்கலாம். முறையான காரணம் இல்லாமல் வீரர்கள் எவரும் வீணான ஓய்வு எடுக்கக் கூடாது என புதிய விதி அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரஞ்சி போட்டியில் முரளி

இந்தியாவின் ரஞ்சி கிண்ண கிரிக்கெட் போட்டியில் பெங்கல் அணிக்கு விளையாட இலங்கை நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு இலங்கை மற்றும் இந்திய கிரிக்கெட் சபைகள் அனுமதி அளித்துள்ளன. இதற்கமைய முரளி 2008-09 பருவகாலத்துக்கான ரஞ்சி தொடரில் பெங்கல் அணிக்கு விளையாட திட்டமிட்டுள்ளார்.

இந்த தகவலை பெங்கல் கிரிக்கெட் சங்க தலைவர் ஜக்மோஹன் டால்மியா தெரிவித்தார்.

ரஞ்சி போட்டியில் பெங்கல் அணி தனது முதல் ஆட்டத்தில் அசாமை சந்திக்கிறது. இந்த ஆட்டம் கௌகாத்தியில் நவம்பர் 3ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஒரு மாநில அணி 4 வெளி வீரர்களை அணியில் சேர்த்துக்கொள்ளலாம். அதில் வெளிநாட்டு வீரர் ஒருவரையும் இணைத்துக் கொள்ள இந்திய கிரிக்கெட் சபை அனுமதி அளித்துள்ளது.

எனினும் இணைத்துக் கொள்ளப்படும் வெளிநாட்டு வீரர் குறைந்தபட்சம் 10 டெஸ்ட் மற்றும் 20 ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருக்க வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளமை விசேட அம்சமாகும்.

அதனடிப்படையிலேயே முரளிக்கு ரஞ்சி போட்டியில் வாய்ப்பு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் தில்ஹார பெர்ணாண்டோ இம்முறை ரஞ்சி போட்டியில் பரோடா அணிக்கு விளையாட திட்டமிட்டுள்ளார். (5)

## இந்திய டெஸ்ட் அணியில் கங்குலிக்கு கிடைத்தது இடம்



(மும்பை)

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் 2 டெஸ்ட் போட்டிகளுக்கான இந்திய அணி நேற்று மும்பையில் தேர்வு செய்யப்பட்டது.

அணியில் மூத்தவீரர் கங்குலி இடம்பெறுவது சந்தேகமாகவிருந்தது. இந் நிலையில் முதல் இரண்டு போட்டிகளுக்கான அணிக்குக் கங்குலி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்தியா வந்துள்ள அவுஸ்திரேலியா அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இவ்விரு அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் எதிர்வரும் 9 ஆம் திகதி பெங்களூரில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தியக் கிரிக்கெட் அணியின் புதிய தேர்வுக் குழுத் தலைவராக ஸ்ரீகாந்த் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அணி வீரர்கள் விபரம் வருமாறு;

அனில் கும்ளே (அணித் தலைவர்), வீரேந்திர சேவாக், ராகுல் ராவிட், கௌதம் கம்பீர், சச்சின் டெண்டுல்கர், சௌரவ் கங்குலி, லக்ஷ்மன், தோனி, ஹர்பஜன்சிங், சகீர்க் கான், இஷாந்த் சர்மா, முனாப் பட்டேல், ஆர்.பி.சிங், பத்ரிநாத் மற்றும் அமித் மிஸ்ரா.

## பழம்பெரும் நடிகர் பூர்ணம் காலமானார்

(சென்னை)

சிறந்த குணசித்திர நடிகரும், டில்லி வானொலி நிலையத்தின் செய்தி வாசிப்பாளராகவும் பல படங்களில் நடித்த பழம்பெரும் நடிகர் பூர்ணம் விஸ்வநாதன் காலமானார்.

உடல்நலக்குறைவு காரணமாக சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி காலமானார்.

(ச-5)

## ஐ.நா. அமைப்...

சோதனையிட்டபோது ஒரு லொறியில் சி-4 வெடிபொருட்கள் மற்றும் மின்கலங்கள் காணப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்ட உணவு லொறி அரசாங்க அதிபரினால் அனுப்பி வைக்கப்பட்டதொன்றென ஐக்கிய நாடுகள் அமைப்பின் பேச்சாளர் கோர்டன் வைஸ் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## கொழும்பிலு...

திலுள்ள வடபகுதியைச் சேர்ந்த மக்கள் பதிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிட்டத்தக்கது.

(ச-5)

## வவுனியாவில்...

கொலைக் கொலையாளியின் உடைமையில் இருந்து எடுக்கப்பட்ட அடையாள அட்டையின் மூலம், அவர் வவுனியாவில் உள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் கல்வி கற்று வந்தவர் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவரும் இராணுவச் சிப்பாய் ஒருவரும் உட்பட 3 பேர் உயிரிழந்தனர் என்பதும், பொதுமக்கள் உட்பட 10 பேர் காயமடைந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் புலன் விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

# இலங்கையில் இடம்பெறும் யுத்தம் முக்கிய கட்டத்தில் தற்போது உள்ளது

## கனேடிய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் யுத்தம் முக்கிய கட்டத்தை அடைந்துள்ளதாக கனேடிய லிபரல் அரசாங்கத்தின் வெளியுறவு அமைச்சர் பொப் ரே தெரிவித்துள்ளார்.

தன்னார்வ நிறுவனங்களுக்கு பாதுகாப்பை வழங்க முடியாது என்ற அடிப்படையில் அவர்களை யுத்தம் இடம்பெறும் பிரதேசங்களில் இருந்து வெளியேற்றியமையிலிருந்து இது தெளிவாவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்த அவர் மேலும் கூறியுள்ளதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பலப்பரீட்சை ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில் நிலைமையை பேச்சுவார்த்தை ஒன்றின் மூலமே கட்டுக்குள் கொண்டுவரமுடியும் எனினும் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக சுயாதீனமான கண்காணிப்புக்குழு ஒன்றின் முன்னிலையில் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டியது அவசியம்.

இலங்கையின் பிரச்சினையை தீர்க்க வேண்டுமானால், பரஸ்பர மரியாதை, அதிகாரப் பகிரலுடனான ஆட்சி முறை, அசாதாரணமான திடசங்கற்பம் என்பனவும் அவசியம்.

இந்த நிலையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைத் தீர்த்து பகைமையை களைய கனடாவினால் முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கான முனைப்புக்கள் உடனடியாக எடுக்கப்படல் வேண்டும். அத்துடன் நாடாளுமன்ற ஜனநாயகம், மனித உரிமைகள் பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். இவற்றையே கனடா எதிர்பார்க்கிறது.

இதனைத் தவிர கனடா இந்தப் பிரச்சினையில் பங்காளியாக இருக்கவோ அல்லது 10 ஆயிரம் கிலோ மீற்றர்களுக்கு அப்பாலில் இருந்து கொண்டு விரலை சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பதையோ விரும்பவில்லை என அவர் கூறினார். (ச-5)

## முல்லைத்தீவிலும் கிளி...

காயமடைந்தவர்களின் விபரம் வருமாறு,

இராமையா விஜயதர்சினி (வயது 16), பரந்தாமன் கௌரி (வயது 03), செல்லையா யோகராணி (வயது 68), செபமாலை இந்திராணி (வயது 28), அருட்சோதி ஆரோக்கியம் (வயது 49), காந்தரூபன் சிவாஜினி (வயது 28), தர்மன் கோகுலவாசன் (வயது 04), கந்தசாமி சத்தியஞானதேவி (வயது 57), வர்ணகுலசிங்கம் இராஜேந்திரம் (வயது 45), செல்லையா சுப்பிரமணியம் (வயது 53), செல்வநாயகம் பெருமாள் (வயது 65), விக்னேஸ்வரன் கமலாதேவி (வயது 26), வேலு லட்சுமிப்பிள்ளை (வயது 68),

இதேவேளை இவ் விமானத் தாக்குதலின் சிதறல்கள் கிளிநொச்சி பொதுமருத்துவமனைப் பகுதிக்குள் வீழ்ந்து வெடித்ததில் கண்ணாடிகள் சேதடைந்துள்ளன.

இதேவேளை கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் விடுதலைப் புலிகளின் இனம் காணப்பட்ட இலக்குகள் மீது 4 தடவைகள் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இராணுவம் கூறியுள்ளது.

விமானப் படையினரின் சுப்பர் சோனிக் விமானங்கள் கிளிநொச்சிப் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் நிர்வாக அலுவலக முகாமொன்றின் மீது நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் 3 விமானத் தாக்குதல் நடத்தியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இத் தாக்குதல் வெற்றியளித்துள்ளதாக விமானப் படைப் பேச்சாளர் வீங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது இலங்கை விமானப் படையினரின் ஜெட் ரக விமானங்கள் விமானத் தாக்குதலை நடத்தியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்தாக்குதல் நேற்றுக்காலை 5.30 மணியளவில் முல்லைத்தீவு பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகள் ஒன்று கூடும் இடத்தின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்துள்ளார். (ச-5)

## வவுனியா அரச...

தையடுத்து வவுனியா மாவட்டத்தின் பதில் அரசாங்க அதிபராக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி எமில்டா சுகுமார் உடனடியாக நியமிக்கப்பட்ட அதேவேகத்தில் அவரை நீக்கிவிட்டு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் நீக்கிலாஸ்பிள்ளையை பதில் அரசாங்க அதிபராக பொதுநிர்வாக அமைச்சு நியமித்திருந்தது.

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தற்போது திருமதி பி.எம்.சாள்ஸை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக நியமித்துள்ளது. (ச-5)

## சுன்னாகம் மின்...

அமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் தற்பொழுது நாளாந்தம் 5 மணித்தியால மின்வெட்டு அமுலிலிருப்பதாக குறிப்பீட்ட அமைச்சர், புதிய மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதன்மூலம் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்கமுடியுமென நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை, 20 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் இந்தப் புதிய மின் உற்பத்தி நிலையத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்மாதம் திறந்து வைப்பார் என ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்தார்.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் யாழ். குடாநாட்டுக்குத் தேவைப்படும் 32 மெஹாவோல்ட் மின்சாரத்தை வழங்க முடியும்.

அதுமட்டுமல்லாது இந்தியா-இலங்கை இருநாட்டுத் தொடர்பில் மதுரையிலிருந்து 500 மெஹாவோல்ட் மின்சாரத்தை இலங்கை பெற்றுக் கொள்ளும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

யாழ். குடாநாட்டில் பொருத்துவதற்காக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மின்பிறப்பாக்கிகள் சீனாவிலிருந்து நேரடியாகக் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டிருந்ததுடன், அதனைப் பொருத்தும் பணிகளுக்கான தொழில்நுட்ப நிபுணர்களும் யாழ்ப்பாணம் சென்றிருந்தனர்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் தெற்கிற்கு மாத்திரமல்லாது வடக்கிற்கும் விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாக ஊடகத்துறை அமைச்சர் லஸ்மன் யாப்பா அபயவர்த்தன கூறினார். (ச-5)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கரணவாய் யா/வேதாரணியேஸ்வரா வித்தியாலய மாணவன் செல்வன் நாகராசா யதுர்சன் 2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 124 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். அவரின் கற்றலுக்கு உறுதுணையாக இருந்த அதிபர், ஆசிரியர்களுக்கு மனப்பூர்வமான நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவர் மேலும் கல்வியில் சிறந்து விளங்க விநாயகர் ஆசி வேண்டி பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துபவர்கள்:-* கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம், நெல்லியடி.

(C-1623)


## ஈழத் தமிழருக்கு ஆதரவான...

இலங்கைத் தமிழர்கள் நன்றாக விசயம் தெரிந்தவர்கள். அவர்களுக்கு உண்மையான ஆதரவாளர்கள் யார்? போலியான ஆதரவாளர்கள் யார்? என்று நன்றாகவே தெரியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு.கவின் நிலை குறித்தும் மத்திய அரசை வலியுறுத்தியும் சென்னையில் எதிர்வரும் 6 ஆம் திகதி மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் முதலமைச்சர் கருணாநிதி கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

இதேவேளை தி.மு.க அன்று முதல் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான கட்சி என்று முதலமைச்சர் கருணாநிதி கூறியுள்ளதுடன் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்துள்ளார். அவை வருமாறு,

***கேள்வி:*** இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு தி.மு.கவை அழைக்கவில்லையே?

***பதில்:*** தி.மு.க தொடக்கம் முதல் இலங்கைத் தமிழர்களுக்கான ஆதரவான கட்சி என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு நன்றாகத் தெரியும். எனவே நம்மை அழைக்க வேண்டாம் என்று நினைத்து இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இதுவரை இருந்தவர்களையும் அரைகுறையாக ஆதரவு அளித்து வந்தவர்களையும் முக்கியமாக இந்தப் போராட்டத்துக்கு அழைக்க வேண்டும் என்று நினைத்து அழைத்திருக்கலாம்.

அதனால் என்ன! இலங்கைத் தமிழர்கள் நன்றாக விசயம் தெரிந்தவர்கள். அவர்களுக்கு உண்மையில் நமக்கு ஆதரவானவர்கள் யார்? போலியாக ஆதரவு காட்டுவோர் யார்? என்பதெல்லாம் நன்றாகவே தெரியும்.

இந்தப் பிரச்சினையில் தி.மு.க மற்றும் தி.மு.க ஆட்சியின் நிலை என்ன என்பது பற்றி சட்டப்பேரவையிலேயே நீண்ட உரை நிகழ்த்தி விளக்கியிருக்கிறேன்.

எப்படியோ உண்ணாவிரத மேடையில் புதிய கூட்டணிக் கட்சியினர் கூடும்போது அ.தி.மு.க ஆட்சியில் ஜெயலலிதா சட்டப்பேரவையில் இலங்கைப் பிரச்சினை குறித்து கொண்டு வந்த தீர்மானத்தை விவாதிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். (ச)


அன்பார்ந்த

அதிபர்களே, ஆசிரியர்களே, மாணவர்களே!

உங்கள் அபிமானத்திற்குரிய வலம்புரியில்

மிக விரைவில்

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்படும்

★ க.பொ.த (சா/த) மாதிரி வினாத்தாள் (இதுவரை வெளிவராத புதிய பாடத் திட்டம்)



★ க.பொ.த (உயர் தர) மாதிரி வினாத்தாள். (ஒவ்வொரு பாடத்திலும் அலகு ரீதியான விளக்கங்களுடன்)



★ 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் என்பன வெளிவரும்.



**பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் தென்மராட்சியில் அனுஷ்டிக்கவுள்ள சிறுவர் தினம்**



| | |
|---|---|
| இடம்:- | ஸ்ரீ கணேசா வித்தியாலயம் (சரசாலை, சாவகச்சேரி) |
| நேரம்:- | காலை 10 மணி |
| திகதி:- | 02.10.2008 வியாழக்கிழமை |
| தலைவர்:- | திருமதி சுதாமதி தயாபரன் (அதிபர்) |
| பிரதம விருந்தினர்:- | திரு.எஸ்.ஸ்ரீநிவாசன் (பிரதேச செயலர், சாவகச்சேரி) |
| சிறப்பு விருந்தினர்:- | டாக்டர். சி.வசிகரன் (கால்நடை வைத்திய அதிகாரி, பருத்தித்துறை) |

**சிறுவர்களுக்கு பசுப்பால் வழங்கப்படும்**

செயலாளர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(C-1624)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.